விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 081 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 26 சனிக்கிழமை (09.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## காற்றின் தரம் யாழில் மோசம்


யாழ்ப்பாணத்தில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் அக்குறணை, கொழும்பு மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-10)

# வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்ட பக்தர்கள் மீது பொலிஸார் அராஜகம்







(வவுனியா)

- கஜேந்திரன் எம்.பி, வேலன் சுவாமிகள், பூசகர் உட்பட 8 பேர் கைது.
- பெண்கள் கழுத்தைப் பிடித்து வெளியேற்றம்.
- சப்பாத்துக் கால்களால் படையல் பொருட்களை உடைத்தெறிந்து அட்டகாசம்.
- பக்தர்கள் மீது பொலிஸார் தாக்குதல்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கனேடியத் தலைநகர் ஒட்டாவாவில்
# இலங்கையர்கள் 6 பேர் படுகொலை

(ஒட்டாவா)

- ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உள்ளடங்கலாக 6 பேர் படுகொலை.
- 7 வயது, 4 வயது, 2 வயது சிறுவர்களும் 2 மாத குழந்தையும் உயிரிழப்பு.
- உயிரிழந்த குடும்பஸ்தரின் நெருங்கிய உறவினரான 19 வயது மாணவன் கைது.

(15ஆம் பக்கம் பார்க்க)



## பால் மா, அரிசி, மிளகாய், சீனி
### விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனத்தினால் பால்மா, அரிசி, மிளகாய், சீனி விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 400 கிராம் பால்மா பைக்கட் ஒன்றின் விலை 125 ரூபாயினால் 15

## 107 வயது முதியவர் சாவகச்சேரியில் மரணம்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் 107 வயது முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி உதய சூரியன் பகுதியைச் சேர்ந்த 15



வெடுக்குநாறி மலையில் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்ட கஜேந்திரன் எம்.பி

## எதிர்க்கட்சிகளின் தலைவர்களை ஐ.எம்.எப்புடன் கலந்துரையாட அழைப்பு
### ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளை அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களைத் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி ஐ.எம்.எப் பிரதிநிதிகளுடன் நேரடியாகக் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களான சஜித் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதி ரணில், மகிந்த, பசில் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களான மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு, தோல்வியில் முடிவடைந்துள்ளதாக தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நிலுவையிலுள்ள அரசியல் விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காகவே இந்த மூன்று தலைவர்களும் நேற்று முன்தினம் சந்திப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இரண்டு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களும் தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்றல் மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகிய இரண்டு கொள்கை விடயங்களில் ஜனாதிபதியுடன் ஒரு கூட்டணியை உருவாக்குவதற்கான கட்சியின் நிலைப்பாட்டை தீர்மானிப்பதற்காக தெளிவுபடுத்தியதாகவும் கூறப்படுகிறது.

மேலும், சிறிலங்கன் எயர்லைன்ஸ் மற்றும் சிறிலங்கா இன்சூரன்ஸ் போன்ற அரச நிறுவனங்களை மட்டுமே மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவந்தார் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன நம்புகிறது.

மேலும் இந்த விடயத்தில் கட்சி தனது உண்மையான சித்தாந்தத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது என்றும் அவற்றை மறுசீரமைக்கும் திட்டத்தில் ஜனாதிபதி தரப்பில் சில சமரசங்களை சிறிலங்கா பொதுஜன பெரமுன நாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அதிகாரப் பகிர்வின் முன்மொழியப்பட்ட வரையறைகள் குறித்தும் அவர்கள் கவலைகளை எழுப்பியதாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், இரு கட்சிகளும் தங்கள் அரசியல் நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும், ஒருவருக்கொருவர் அக்கறையுள்ள விடயங்களில் எவ்வளவு தூரம் பொதுவான நிலையைக் கண்டறிய முடியும் என்பதைப் பொறுத்து இறுதி முடிவுகளை எடுக்கவும் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் இந்த விடயங்கள் தொடர்பில் மூவருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு தோல்வியில் முடிவடைந்துள்ளதாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-10)

# நாயத்து வெளிப்பகுதியில் மோ.சைக்கிள் தீக்கிரை

## திருக்கேதீஸ்வரம் ஆலயம் சென்ற போது விபரீதம்



திருக்கேதீஸ்வரம் ஆலய வழிபாட்டுக்குச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாயத்து வெளிப்பகுதியில் குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் முற்றாக தீக்கிரையாகியுள்ளது. ஆயினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் அடம்பன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-10,100)

# திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மஹா சிவராத்திரி நிகழ்வு



வரலாற்றுப் புகழ் பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் 2024ஆம் ஆண்டுக்கான மஹா சிவராத்திரி நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற நிலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

நேற்றைய தினம் உலகம் முழுவதும் இருந்து வருகை தந்த சிவ பக்தர்கள் மன்னார் பாலாவியில் நீராடி பாலாவி தீர்த்த நீரை திருக்கேதீஸ்வர ஆலயத்தினுள் உள்ள மஹா சிவலிங்கத்திற்கு நீர்வார்த்து நெய் விளக்கு ஏற்றி வேண்டுதல்கள் மற்றும் நேர்த்திக்கடனைச் செலுத்தினர்.

அத்துடன் சிவராத்திரி நிகழ்வுகளை முன்னிட்டு திருக்கேதீஸ்வர திருப்பணி சபையின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட இந்து கலாசார நிகழ்வுகள் அறநெறி சொற்பொழிவு நிகழ்வுகளும் இடம் பெற்றது. (ம-10)

# வெடுக்கு...

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி தின இரவு நிகழ்வுகளுக்காக கூடியிருந்த பக்தர்கள் மீது பொலிஸார் வன்முறையில் ஈடுபட்டனர்.

வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகளை மேற்கொள்ள பக்தர்கள் சென்றிருந்தனர்.

நீதிமன்ற அனுமதியுடன் வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்ற பக்தர்களுக்கு தடைகளை ஏற்படுத்தி நேற்று காலையில் இருந்து பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுத்தியவண்ணம் இருந்தனர்.


பல்வேறு தடைகளுக்கு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வழிகாட்டலுடன் குறித்த பகுதிக்குச் சென்று பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

"தொல்லியல் சட்டத்தின்படி பிற்பகல் 6 மணிக்கு பின்னர் தொல்லியல் இடத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட முடியாது. ஆறு மணிக்கு பின்னர் நிற்பவர்களைக் கைதுசெய்வோம்" என பொலிஸார் எச்சரிக்கை விடுத்ததால் பக்தர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

சிவராத்திரி நிகழ்வுகள் இரவு முழுவதும் இடம்பெறவிருந்த நிலையில் வழிபாடுகளுக்கு பக்தர்கள் ஆயத்தமாகியிருந்தனர். இந்த நிலையில் அங்கு சென்ற பொலிஸார், பக்தர்கள் மேல் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். பெண்களின் கழுத்தைப் பிடித்து இழுத்து வீசியதுடன் சுவாமிக்கான படையல் பொருட்களை சப்பாத்துக்கால்களால் உதைந்தெறிந்து அட்டகாசம் செய்ததனால் அங்கு பெரும் பதட்டநிலை ஏற்பட்டது.

கஜேந்திரன் எம்.பி., வேலன் சுவாமிகள், பூசகர், ஆலய நிர்வாகத்தினர் உட்பட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ம-10,250)

# மரண அறிவித்தல்



தோற்றம் 29 - 07 - 1969

மறைவு 04 - 03 - 2024

## மயில்வாகனம் உமாசுதன்

வல்வெட்டித்துறை மானங்கானையினைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியினை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வசித்து வந்த மயில்வாகனம் உமாசுதன் அவர்கள் கடந்த 04.03.2024 (திங்கட்கிழமை) அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.04.2024) ஞாயிற்றுக் கிழமை கனடா நேரப்படி காலை 10.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படவுள்ள அதே வேளை அன்னாரின் சகோதரன் M.சிறி அவர்களின் நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறையில் அமைந்துள்ள இல்லத்தில் நேரலையாக நடைபெறவுள்ளது.

எனவே இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சகோதரன்
M.சிறி
077 432 2216
077 498 0623
M.S.R. கடலுணவு தொழி[illegible]

(0003)


## பணியாளர் தேவை

கொழும்பில் உள்ள உணவகம் ஒன்றிற்கு யாழ்ப்பாணப் பாரம்பரிய முறைப்படி சைவ அசைவ உணவு தயாரிக்கக்கூடிய 40 - 55 வயதுக்குட்பட்ட ஆண், பெண் சமையலாளர்கள் தேவை. (உணவு தங்குமிடம் இலவசம்)

070 445 4656

(006)

## காணி விற்பனைக்கு உண்டு


யாழ்ப்பாணம் அச்சுவேலி சன்னதிகோவில் செல்லும் பிரதான வீதி தீர்த்தப்பிள்ளையார் கோவில் அருகாமையில் 24 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப் பாதையுடன்
- பிரதான வீதியிலிருந்து 100 m தூரம், குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி, நன்னீருற்று
- அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 1 1/2 Km தூரம்
- ஒரு பரப்பின் விலை 500,000(ஐந்து இலட்சம்)
- பார்வையிடும் நேரம் காலை 8 முதல் மாலை 6 வரை.

(005)

076 739 0413
077 468 3354


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவை நலன் பாராட்டு

திரு.

## யோசவ் எட்வேட் பாங்கிராஸ் (SLPS-I)

அறுபதாவது அகவைதனில்
மணிவிழா கண்ட நாயகனே
முப்பத்தைந்து வருட தன்னலமற்ற சேவையினை
தன்னிகரில்லா வழங்கிய முதல்வனே
கல்விப்பணி மட்டுமல்ல சமூகப் பணியை
அறத்துடனே தந்த உயர்ந்த உள்ளமே
மாதகல் மண்ணில் மாண்புறு சேவையினை
மனதார வாழ்த்துகின்றோம் நாமெல்லாம்

பிறந்த திகதி :-09.01.1965
ஆரம்பக்கல்வி :- யா/மாதகல் சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை
இடைநிலைக்கல்வி :- யா/மாதகல் சென்ஜோசப் ம.வி
யா/இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

### சேவை விபரம்

| | | |
|---|---|---|
| யா/மாதகல் சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை (ஆசிரியர்) | - 21.10.1988 | - 12.02.1991 |
| ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி (ஆசிரியர்) | - 13.02.1991 | - 31.12.1992 |
| யா/சென்.ஹென்றீஸ் கல்லூரி (ஆசிரியர்) | - 01.01.1993 | - 31.12.1995 |
| மன்/தட்சணாமருதமடு அ.த.க பாடசாலை (ஆசிரியர்) | - 01.01.1996 | - 30.10.1998 |
| மன்/சிலாபத்துறை அரசினர் முஸ்லீம் பாடசாலை (ஆசிரியர்) | - 31.10.1998 | - 17.12.1999 |
| மன்/கொக்குப்படையான் றோ.க.த பாடசாலை (ஆசிரியர்) | - 18. 12.1999 | - 09.01.2002 |
| மன்/முள்ளிக்குளம் றோ.க.த பாடசாலை (அதிபர்) | - 10.01.2002 | - 30.04.2003 |
| மன்/ மோட்டக்கடை றோ.க.த பாடசாலை (அதிபர்) | - 29.04.2005 | - 30.09.2005 |
| யா/மாதகல் சென் ஜோசப் ம.வி (அதிபர்) | - 01.10.2005 | - 23.10.2005 |
| யா/நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க.த பாடசாலை (அதிபர்) | - 24.10.2005 | - 14.06.2010 |
| யா/சில்லாலை றோ.க.த பாடசாலை (அதிபர்) | - 15.06.2010 | - 10.02-2014 |
| யா/மாதகல் சென்ஜோசப் ம.வி (அதிபர்) | - 11.02.2014 | - இற்றை வரை |

(19321)

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்,
யா/மாதகல் சென்ஜோசப் ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் பெரும் போர் சென்.ஜோன்ஸ் ஆதிக்கம்

வடக்கின் பெரும் போர் பெரும் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி வெற்றி வாய்ப்பில் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் யாழ். மத்திய கல்லூரி நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் 140 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்களை இழந்துள்ளது. இன்னும் ஒரு விக்கெட்டே கைவசமுள்ள நிலையில் சென். ஜோன்ஸ் கல்லூரியை விட 69 ஓட்டங்களே முன்னிலை வகிக்கிறது.


வடக்கின் பெரும் போர் என்று அழைக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகளின் 117ஆவது பெருந்துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ். மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் இன்னிங்ஸில் அந்த அணி 56.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இதில், சயந்தன் அதிகபட்சமாக 55 ஓட்டங்களை எடுத்தார்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் நாள் ஆட்டம் முடிவில் 30.5 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சச்சின் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது சென். ஜோன்ஸ் கல்லூரி சச்சினும் அணித் தலைவர் ஜேசியலும் ஆட்டத்தைத் தொடங்கினர்.




மேலதிகமாக 4 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சச்சின் ஆட்டமிழந்தார். அவர் 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது அனுசாந்தின் பந்தில் டெரிக்ஸனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் நிலைத்த ஜேசியலுடன் ரன்ட்யோ களமிறங்கினார். இருவரும் மத்திய கல்லூரியின் பந்துவீச்சை சிறப்பாகக் கையாண்டனர். ரன்ட்யோ 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, மறுமுனையில் ஜேசியல் அரைச் சதம் கடந்தார். அவர் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்கள் சோபிக்காத நிலையில் சென். ஜோன்ஸ் கல்லூரி 70.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் 72 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது சென். ஜோன்ஸ் கல்லூரி அணி.

யாழ். மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் தீசன், அபிலாஷ் ஆகியோர் தலா 4 விக்கெட்களையும் அனுசாந்த் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது யாழ். மத்திய கல்லூரி.

தொடக்கம் கொடுத்த சிந்துஜன் 4 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த டெரிக்சன் முதல் பந்திலேயே கஜகர்ணனின் பந்தில் ஸ்மித்திடம் பிடி கொடுத்து பெவிலியன் திரும்பினார்.

மற்றொரு தொடக்க வீரரான சிமில்ரன் பொறுமையாக ஆட அடுத்து வந்த அனுசாந்த் சற்று அதிரடி காட்ட முனைந்தார். 3 பௌண்ட்ரிகளை விளாசிய அவர் 20 ஓட்டங்களுடன் வெளியேறினார். இந்த நிலையில், சிமில்ரன் 21 ஓட்டங்களில் வெளியேறினார்.

பின்னர் வந்த வீரர்கள் ஓரளவுக்கு ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தனர். அஜய் 23, நியூட்டன் 17, சயந்தன் 16 என ஆட்டமிழந்தனர்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவடைந்தபோது மத்திய கல்லூரி 42 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பருதி 15 ஓட்டங்களுடனும் தீசன் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது உள்ளனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்துவீச்சில் சாம்சன், அசாந்த், கஜகர்ணன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் மாதுளன், ரன்ட்யோ ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும். (ம-10,33)

# இறுதிப்போட்டிக்கு தெரிவானது கே.சீ.சீ.சீ அணி





ஆட்டநாயகன்
**துஸ்சியந்தன்**

விக்ரம் - ராஜன் - கங்கு வெற்றிக் கிண்ணத் தொடரில் பிளே ஒப் எலிமினேற்றர் போட்டியில் வெற்றி பெற்ற கே.சீ.சீ.சீ அணியும் பிளே ஒப் தகுதிச்சுற்று I இல் தோல்வியடைந்த யாழ். ஜொனியன்ஸ் அணியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்ற பிளே ஒப் தகுதிச் சுற்று II இல் மோதின.

இப்போட்டியில் கே.சீ.சீ.சீ அணி 52 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ அணி 29.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

துஷ்யந்தன் 56, ஜெயரூபன் 29, பிரவீன் 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ். ஜொனியன்ஸ் அணியைச் சேர்ந்த விதூஸன் 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் லவேந்திரா 34 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் சன்சஜன் 31 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

183 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ். ஜொனியன்ஸ் அணி 24.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது.


கிஸாந்துஜன் 35, அன்புஜன் 29, தனுஜன் 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் கே.சீ.சீ.சீ அணியைச் சேர்ந்த நிமலதாஸ் 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் துஸ்சியந்தன் 24 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் பிரதீஸ் 18 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் கே.சீ.சீ.சீ அணியைச் சேர்ந்த துஸ்சியந்தன் 56 ஓட்டங்களையும் பெற்று 3 இலக்குகளையும் கைப்பற்றி சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த கிரியல்ல இராஜினாமா



(கொழும்பு)

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரியல்ல நேற்று பதவி விலகியுள்ளார்.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஒரு வாரத்திற்கு முன்னர் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையை இராஜினாமா செய்யுமாறு அறிவித்திருந்த நிலையிலேயே இவர் தலைவர் பதிவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். (நி-6)

## இலங்கைக்கு கிடைக்கும் டொலர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த பெப்ரவரி மாதத்தில், வெளிநாடுகளிலுள்ள இலங்கை பணியாளர்கர் ளால் 476.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை க்கு அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது கடந்த 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகை யில் 16.88 சதவீத அதிகரிப்பாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், குறித்த மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் மூலம் இலங்கை 345.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இந்த தொகை கடந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்துடன், ஒப்பிடுகையில், 113. 92 சதவீத அதிகரிப்பாகும் எனவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது. (நி-5-6)

## கோட்டாவின் புத்தகத்திற்கு அதிக கிராக்கி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் எழுதப்பட்ட "என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்ற சதி" என்ற புத்தகத்தின் முதல் கையிருப்பு நேற்று முன்தினம் முற்றாக விற்று தீர்ந்ததாக விஜித யாப்பா பதிப்பகத்தின் தலைவர் விஜித யாப்பா தெரிவித்தார்.

சமூகத்தின் பல்வேறு தரப்பு மக்களும் தமது புத்தகக் கடைகளில் இருந்து புத்தகத்தை வாங்கியதாகவும் அவர்களில் பெரும்பாலானவர்கள் எம்.பி.க்கள் மற்றும் அரசியல்வாதிகள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"புத்தகத்திற்கு அதிக கிராக்கி உள்ளது. எதிர்பார்த்ததை விட வேகமாக விற்பனையாகிறது" என்றும் தெரிவித்திருந்தார். (நி-5-6)


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Painting of Internal Medical ward Complex Ground Floor & First Floor | 1500.00 | 161,000.00 | 91 | 8.05 | C7 |
| 2. | Painting of Internal Medical ward Complex Second Floor, Third &Fourth Floor | 1500.00 | 164,000.00 | 91 | 8.20 | C7 |
| 3. | Painting of Internal Medical ward Complex External side and courtyard. | 1500.00 | 155,000.00 | 91 | 7.78 | C7 |
| 4. | Construction of lift room & Installation of lift machine at NTS lecture Hall Building | 5000.00 | 351,000.00 | 91 | 17.59 | C6 |
| 5. | Renovation of Histopathology Laboratory, Changing Drugstore Roller Shutter Door, Construction of coveredway new Medical Clinic & Construction of Patient waiting Area at A&E with Available roof & structure Material | 1500.00 | 85,000.00 | 91 | 5.59 | C7 |
| 6. | Renovation of ward No. 17, 23A, 16B, 23B, 05,12,14,11(washroom) & Medical ward Complex Sewerage Duct line | 1500.00 | 150,000.00 | 91 | 7.51 | C7 |
| 7. | Renovation of ward No 01, 02, 03, 04, 07, 08, 09,10,16B,21,22&20 (washrooms) | 1500.00 | 192,000.00 | 91 | 9.62 | C7 |
| 8. | Renovation of SHO Quarters Toilet, Old OPD courdyard Grill work & Repair of plate water leakage at WD 31 & Renovation of Rehabilitation Building | 1500.00 | 115,000.00 | 91 | 5.78 | C7 |
| 9. | Renovation of Consultant Tea lounge & HO Quarters washroom | 1500.00 | 200,000.00 | 91 | 9.98 | C7 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 11.03.2024 up to 31.03.2024 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 01.04.2024, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

(C-8496)

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital,Jaffna.

09.03.2024.


# இராசிபலன்

09.03.2024
மாசி 26, சனிக்கிழமை
சதுர்த்தசி மாலை 6.04 மணிவரை

அவிட்டம் காலை 7.02 மணிவரை
சுபநேரம் 3.23-4.53 மணிவரை
இராகுகாலம் 9.23-10.53 மணிவரை

போதாயன அமாவாசை
சந்திராஷ்டமம்: புநர்பூசம்

வளவன்




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, வேலைகள் முடியாமல் தாமதமாகலாம், வழிபாட்டால் மகிழ்ச்சி காணும் நாள்.




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.




சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்




நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள், பொது வாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயரும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள்.




சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், [illegible] நாள்.




ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

அமைதியை விட மேலான ஆனந்தம் வேறு எதுவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.கீரிமலை நகுலேஸ்வர ஆலய வருடாந்திர மகோற்சவ தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை பக்தி பூர்வமாக நடைபெற்றது. பல அடியவர்கள் தமது நேர்த்திக்கடன்களில் ஈடுபட்டு இருந்தனர். (படங்கள்- சிவசாந்தன்)

# மகளிர் தினத்தை முன்னிட்டு உறவுகளால் போராட்டம் முன்னெடுப்பு

(நெளுக்குளம்)

**மகளிர் தினமான நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



மகளிர் தினத்தை முன்னிட்டும், முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் ஏழு வருட பூர்த்திக்கும் ஆதரவு தெரிவித்தும் குறித்த போராட்டம் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தின் போது இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள், நீதி தேவதை ஏன் கண்மூடி விட்டாய்?, சர்வதேசமே இன்று பெண்கள் தினமா? பெண்கள் ஒடுக்கப்படும் தினமா?, முடிவில்லா துயரம் தான் தமிழ் தாயின் தலைவிதியா?, 55 ஆவது தொடரிலாவது எமக்கு நீதி கிடைக்குமா?, கால அவகாசம் வேண்டாம் முறையான நீதி விசாரணையே வேண்டும், பெண்கள் நாட்டின் கண்களா? இல்லை கண்ணீருக்காக கண்களா? போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (நி-6-299)

## புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த மாதம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உபதலைவர் சி.சுகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. போசகராக விஞ்ஞான பீட பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர். கலாநிதி. புண்ணியமூர்த்தி ரவிராஜன், தலைவராக யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. நாமகள் கிருஸ்ணபிள்ளை, உப தலைவர்களாக யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட பேராசிரியர். கலாநிதி. சிவசாந்தினி குகநாதன் மற்றும் சி. சுகுமாரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் செயலாளராக ஆ.கதிர்காமநாதன், உபசெயலாளராக திருமதி. மைதிலி தேவராஜா, பொருளாளராக க.ம.ஈஸ்வரதேவன் , பத்திராதிபராக ஞா.இரத்தினசிங்கம் மற்றும் நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. (நி-6)

## மெய்வல்லுநர் போட்டி

(கரணவாய்)

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரியின் அதிபர் பி.அரவிந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி-6-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 250 | 235 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 170 | 200 | 175 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 400 | 400 | 320 |
| தக்காளி | 350 | 350 | 300 | 400 | 260 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120 | 200 | 120 |
| கோவா | 400 | 400 | 400 | 400 | 300 |
| கரட் | 350 | 500 | 450 | 450 | 350 |
| பூசணி | 220 | 200 | 200 | 280 | 210 |
| புடோல் | 150 | 150 | 180 | 160 | 130 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200 | 140 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 250 | 230-300 |
| பெரிய வெங்காயம் | 400 | 400 | 400 | 400 | 430 |
| பாகற்காய் | 450 | 350 | 400 | 400 | 470 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 400 | 155 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 200 | -- |
| பயற்றங்காய் | 500 | 350 | 400 | 500 | 460 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 400 | 280 |
| பீற்றூட் | 300 | 300 | 350 | 300 | 250 |
| கறிமிளகாய் | 400 | 600 | 350 | 350 | 380 |
| முருங்கைக்காய் | 1000 | 1300 | 800-1000 | 1400 | 1410 |
| போஞ்சி | 600 | 250 | 400 | 400 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 180 | 180 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 80 | 50 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 200 | 165 |
| தேங்காய் (ஒன்று) | 110 | 110 | 90 | 70-100 | 40-80 |
| இராசவள்ளி | 320 | 400 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | 160 | 200 | 200 | 300 | 100 |
| முள்ளங்கி | 80 | 100 | 320 | 200 | 70 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 120 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 100 | 80 | 120 |
| ஈரப்பலா | 100 | 150 | 150 | 200 | 70 |

## ஊர்காவற்றுறையில் கண்பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

கண்புரைசத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனைசெய்து தெரிவு செய்யும் கண்பரி பரிசோதனை முகாம் இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையிலும் காரைநகர் பிரதேச மருத்துவமனையிலும் இடம்பெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கானகண்புரை சத்திர சிகிச்சை யாழ்.போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SINNATHURAI CHILDREN FOUNDATION

## சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம்

## සින්නත්තුරෛ ළමා පදනම

## திருக்குறள் பாவோதல் போட்டி

சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம் மற்றும்
பனுவல் புக்மார்ட் (Book Mart) வலம்புரி ஊடக அனுசரணையுடன்
நடாத்தும் பதின்னான்கு (14) வயதிற்கு உட்பட்ட மாணவர்களிற்கான
திருக்குறள் பாவோதல் போட்டி

**எதிர்வரும் 16.03.2024, 17.03.2024 சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் போட்டிகள் நடைபெறும்.**

**இடம் : யாழ்/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை**

**நேரம் : காலை 10 மணிக்கு போட்டி ஆரம்பமாகும்.**

போட்டிக்கு வருகைதரும் குழந்தைகளுக்கான பாதுகாப்பும் பொறுப்பும் பெற்றோர்களை சார்ந்தது. விண்ணப்பித்தோர் மாத்திரம் உங்களுக்கான போட்டி நேரத்தை கீழ்க்காணும் கைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

எமது நோக்கமெல்லாம் குழந்தைகள் மனதில் குறளை விதைப்பதே!!

(இ) **குறிப்பு : நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது**

தகவல்
SCF நிறுவனம்,
பனுவல் Book Mart

ஊடக அனுசரணை
"வலம்புரி"

தொடர்புகளுக்கு : 0778226826
SCF தலைவர் : சி.நித்தியானந்தன்
பதிவு எண் : GA3126

## சங்கானை பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் கிளை பொதுச்சபைக் கூட்டம் (10.03.2024)

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் 12 கிளைகளுக்கான கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் கீழ்வரும் விபரப்படி 10.03.2024 ஆம் திகதியில் உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான உரிய அழைப்புக்கடிதங்கள் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள நிலையில் உரிய கிளையின் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் உரிய கூட்டத் திகதியில் சமூகமளித்து கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

| கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 50 | சங்கானை | 10.03.2024 | சங்க கள் உற்பத்தி நிலையம் | திரு.அருளானந்தன். துபாளன் |
| 51 | நிற்சமாம் | 10.03.2024 | சரஸ்வதி சனசமூக நிலையம், நிற்சாமம் | திரு.சிவசிதம்பரம் சிறீதரன் |
| 52 | சித்தங்கேணி | 10.03.2024 | சங்க தலைமைக்காரியம் | திரு.இராஜசிவம் தனுசன் |
| 53 | காலையடி | 10.03.2021. | ஸ்ரீராம் சனசமூக நிலையம், காளுவன் சுழிபுரம் | திரு.மகேசன் நிசாந்தன் |
| 54 | குடாக்கனை | 10.03.2024 | திருநாவுக்கரசு சனசமூக நிலையம், பாண்வெட்டை , சுழிபுரம் | திரு.கனகரத்தினம் வக்சன் |
| 55 | காளுவன் | 10.03.2024 | தமிழ் தாய் சனசமூக நிலையம் திக்கரை சுழிபுரம். | திரு.இரத்தினராசா கஜந்தன் |
| 56 | தொல்புரம் | 10.03.2024 | அக்கினி வைரவர் பொது நோக்கு மண்டபம் மூளாய் | திரு.ஜெயபாலன் சதீஸ் |
| 57 | பொன்னாலை | 10.03.2024 | ஸ்ரீ கண்ணன் சனசமூக நிலையம், பொன்னாலை சுழிபுரம் | திரு .இராசரத்தினம் வேல்குமார் |
| 58 | வட்டுக்கிழக்கு | 10.03.2024 | கலைவாணி கலையரங்கு துணவி சங்கரத்தை. | திரு.சிங்கராசா சியாந்தன் |
| 59 | வட்டுமேற்கு | 10.03.2024 | அக்கினி வைரவர் பொது நோக்கு மண்டபம் மூளாய் | திரு பாலச்சந்திரன். பாலரவி |
| 60 | அராலிவடக்கு | 10.03.2024 | திருமகள் சனசமூக நிலையம், அராலி வடக்கு. | திரு.தங்கராசா. கண்ணதாசன் |
| 61 | அராலிமேற்கு | 10.03.2024 | செந்தமிழ் கடற்தொழிற்சங்கம் அராலி மத்தி | திரு.கனகரட்ணம் திஸாகரன் |

**செயலாளர் ,**
**சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்,**
**பிரதான வீதி, சங்கானை.**

(19398)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1985- இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: - 56
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்: HNDA (London PR)
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்
தொ.இ: B/14075

பிறப்பு:1991 -இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: -
உயரம்:5' 9"
தகைமை/தொழில்- BA,(Computer Opreator)
எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்
தொ.இ: B/14078

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம் - பூரம்
கி.பா: - 18 1/2
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்: BSC, (DO)
எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்
தொ.இ: B/14082

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: - 30 சூரி செவ் 11 இல்
உயரம்: 5' 7"
தகைமை/தொழில்:- BSC (IT), Software Engineer (Pvt)
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள படித்த பெண்
தொ.இ: B/14085

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995 -இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:-
உயரம்: 162cm
தகைமை/தொழில்:. Nursing, Computer Science (Diploma)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14118

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி:பா: -
உயரம்: 159cm
தகைமை/தொழில்: IT (German), Airport Officer
எதிர்பார்ப்பு: IT தொடர்பானவர்
தொ.இ: G/14119

பிறப்பு -1996 -இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: -24
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc Eng (Textile), Material Developement
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/14009

பிறப்பு -1991 -இந்து
நட்சத்திரம் - சித்திரை
கி.பா:- 41
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bank Staff
எதிர்பார்ப்பு: Qs, Software Engineer, IT
தொ.இ G/14126

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, உப அலுவலகம், கோப்பாய்.

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்- 10. அரசடி வீதியில். 30 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம். வீரகத்திப்பிள்ளையார் கோவில் என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தினை கோப்பாய் தெற்கு. கோப்பாய் தற்போது அவுஸ்திரேலியா நாட்டில் வதியும் கந்தையா சிவானந்தனும். தற்போது கனடா நாட்டில் வதியும் கந்தையா முருகானந்தனும் என்பவர்கள். பிரசித்த நொத்தாரிசு மேனகா கேசவனால் வரையப்பட்ட 2016.02.01 ஆம் திகதிய 841 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இருபாலை. அரசடி வீதி என்னுமிடத்தைச் சேர்ந்த "இராசரத்தினம் நித்தியானந்தசிவமும் பெண் கதிர்மலரும்" என்பவர்களுக்கு ஒப்படைத்துள்ளார்கள்.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியில் தனது பிதா. காலஞ்சென்ற நாகலிங்கம் கந்தையா என்பவரிடமிருந்து அவரின் வழியால் தனக்கு வந்தடைந்த பிதாவழி முதுசமும் நெடுங்காலத்தடையற்ற ஆட்சியுமாயுடையதென்றும் வெளிப்படுத்தி இவ் அறுதி உறுதி எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் கிழக்குப்பகுதி. கோப்பாய் கோவிற்பற்று. இருபாலை இறை. உள்ளூராட்சி அதிகாரசபை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலர் பிரிவு. வலிகாமம் கிழக்கு கிராமசேவகர் பிரிவு J/258 "மயிலை அடைப்பு" நி.பர(2) இரண்டு. குளி (9) ஒன்பதும் வீடும் கிணறும் மலசலகூடமும். இது 2012 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 7 ஆம் திகதி உத்தரவு பெற்ற உளாந்தா திரு.ரி.தங்கராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட 5672 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது.

**இவ்வாதனத்திற்கான எல்லைகள்**
கிழக்கு: ஒழுங்கை
வடக்கு: ஒழுங்கை
மேற்கு: வேலுப்பிள்ளை வரதனுக்கும் பெண் மலருக்குமுரிய ஆதனம்
தெற்கு: தியாகராஜா மகேஸ்வரிக்கும் சீவரட்ணம் கனகம்மாவுக்குமுரிய ஆதனம்

தற்போது இவ்வாதனத்தை இராசரத்தினம் நித்தியானந்தசிவமும் பெண் கதிர்மலரும். தமது பெயரிற்கு எமது ஆதனப்பதிவேட்டில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப் பித்துள்ளனர். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறும் யாரேனும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது "இராசரத்தினம் நித்தியானந்தசிவமும் பெண் கதிர்மலரும்" என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

(19393)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தி

# திருமதி.நளினி அகிலதாஸ் அவர்களின்



## தவத்திரு வேலன் சுவாமிகளின் ஆசிச்செய்தி

ஆசிரியப்பணியை "என் கடன் பணி செய்து கிடப்பதே" என தலைமேற்கொண்டு 1988 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை, 35 வருட காலமாக ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகர்ாகவும் கடமையாற்றிய அம்மையாரின் பணி சாலச்சிறந்தது. திருமதி நளினி அகிலதாஸ் அவர்கள் மிக நெருக்கடியான காலகட்டத்திலும் எழுதுமட்டுவாழ் போன்ற கடினப் பிரதேசத்தில் பணியாற்றியமை பாராட்டுக்குரியதாகும். ஆசிரியர்களின் சேவைக்கு வேண்டிய வகையில் தேவைகளை உணர்ந்து ஆலோசனை வழங்கி கற்பித்தலுக்கு உதவுவதும், மாணவர்களைச் சிறக்க வைப்பதும் சிறந்த பணியாகும்.

அன்னாரின் இப்பணியானது சிறந்த வகையில் அமைவதற்கு அவரது கணவரும் கல்வித்துறை சார்ந்தவராதலால் அவரது ஒத்துழைப்பும் உந்துசக்தியாக அமைந்தது.

மனித வாழ்க்கையில் மூன்றாவது ஆச்சிரமமாகிய வானப்பிரஸ்த ஆச்சிரமம் 60 வயதிலிருந்து ஆரம்பிக்கின்றது. இதுவரை பெற்ற அறிவு, ஆற்றல், அனுபவம் ஆகியவற்றை இனிவரும் காலங்களில் சமுதாய நன்மைக்காக, இறைபணிக்காக, பலனை எதிர்பாராத பொதுத்தொண்டுக்காக பயன்படுத்த வேண்டும் என எமது சமய சாஸ்திரங்கள் சொல்லியிருக்கின்றன. அந்த வகையில் அம்மையார் அவர்கள் தமது ஓய்வுக்காலத்தை மேற்கூறியபடி சமுதாய நன்மைக்காக பயன்படுத்த வேண்டும் என்பது எமது அன்பான வேண்டுகோளாகும்.

திருமதி நளினி அகிலதாஸ் அம்மையார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் நீண்ட ஆயுளுடன், தேக ஆரோக்கியத்துடன், மன அமைதியுடன், ஆன்மீகநெறியில் வாழ ஆசி வேண்டி எல்லாம் வல்ல நல்லைக் கந்தப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

தவத்திரு வேலன் சுவாமிகள்,
ஆதீனமுதல்வர்,
சிவகுரு ஆதீனம், நல்லூர்.



## சேவையால் உயர்ந்தவர்

கல்வித்துறையில் 34 ஆண்டுகள் மிகச்சிறப்பாகப் பணியாற்றி மணிவிழாக் காணும் ஆசிரிய ஆலோசகர் திருமதி. நளினி அகிலதாஸ் அவர்களுக்கு இனிய மணி விழா வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனது சேவைக்கால ஆரம்பத்தில் தென்மராட்சியில் ஆசிரியராகக் கடமையாற்றி தென்மராட்சியின் ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றினார்.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இவர் ஆசிரிய ஆலோசகராக பணியாற்றத் தொடங்கியதிலிருந்து இவரது சேவை பல்வேறு உயர் பரிமாணங்களைத் தொட்டது. இவரது பிரத்தியேகத்திறன் மற்றும் இவரது மிகச்சிறந்த அர்ப்பணிப்புக் காரணமாக யாழ்.கல்வி வலயத்தில் ஆரம்ப கல்வித்துறை உயர் வளர்ச்சி அடைந்தது.

கல்வித்துறையில் இவர் உயர் தகைமைகளை கொண்டு இருக்கிறார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடை பெற்ற தேசிய கல்வி நிறுவக கல்வி முதுமாணிப் பட்டநெறியின் மிகச்சிறந்த மாணவியாகத் திகழ்ந்து உயர் சித்தியும் பெற்றார்.

எனது 35 வருட கால அவதானிப்பில் திருமதி நளினி அகிலதாஸ் மற்றும் அவரது கணவர் திரு . அகிலதாஸ் அவர்களும் எந்த கல்வி புலத்தில் கடமையாற்றி இருந்தாலும் அந்த இடங்களை அதி உன்னத நிலைக்கு இட்டுச் சென்ற பெருந்தகைகள். இவர்கள் தூரநோக்கான சிந்தனையாளர்கள். மிகுந்த அர்ப்பணிப்பு மிக்கவர்கள். சவால்களை துணிச்சலுடன் ஏற்றுகொள்பவர்கள். எப்போதும் துரிதமாக அபிவிருத்தி சார்ந்த மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள். முடியாததை முடியும் என சாதித்து காட்டிய வர்கள்.

இவர்களது சேவையின் மகத்துவம் பற்றி ஏனையோர் புகழ்ந்து உரைக்கும் போது மிகவும் மகிழ்ச்சி அடைந்து இருக்கின்றேன். இவர்கள் சேவையாற்றிய காலப்பகுதிகள் குறித்த இடங்களிற்கு பொற்காலமாக அமைந்திருந்தன என்பது சமூகத்தின் கருத்தாகத் திகழ்கிறது .

மிகச்சிறந்த கல்விச் சேவையாளர்களான இவர்கள் அதற்கான கடமையின் வெகுமதிகளாக சர்வதேச தகைமை வாய்ந்த பொறியியலாளர்களை பிள்ளைகளாகப் பெற்றிருக்கிறார்கள்.

ஒரு கல்விச் சேவையாளன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு திருமதி நளினி அகிலதாஸ் அவர்கள் மிகச்சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறார். அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

S.R.சத்தியேந்திரம்பிள்ளை,
உப பீடாதிபதி,
தேசிய கல்வியியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.



## உயர்ந்த பங்களிப்பை வழங்கியவர்

கல்விப்புலத்தில் தொடர்ச்சியாக 36 வருடங்கள் நிறைவான சேவையை ஆற்றி தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறும் திருமதி நளினி அகிலதாஸ் அவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 25 வருடங்கள் ஆசிரியராகவும் 13 வருடங்கள் ஆசிரிய ஆலோசகராகவும் சிறப்பான சேவயினை வழங்கிய அவர் தனது சேவைக்காலத்தில் தனது கல்வித் தகைமையையும் உயர்த்திக் கொண்டார். இதன் மூலம் யாழ்.கல்வி வலயத்தில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு வழிசமைத்ததோடு ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு ஆசிரிய ஆலோசகர் என்ற வகையில் தன்னாலான உயர்ந்த பங்களிப்பினை செய்தவர். இதற்காக எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறந்த குடும்பத் தலைவியான அவர் புகழ்பூத்த அதிபராகவும் தலைசிறந்த கல்வி நிர்வாகியாகவும் விளங்கிய அவரது கணவர் திரு.அ.அகிலதாஸ் அவர்களின் பணிக்கு உறுதுணையாக இருந்தவர். உயர்கல்விப் புலமையும் பண்பும் கொண்ட பிள்ளைகள், மருமக்கள், கணவருடன் ஓய்வு காலத்தைப் பயனுள்ள முறையில் மகிழ்வுடன் களிக்க இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

நடராஜா தெய்வேந்திரராஜா,
வலயக்கல்விப் பணிப்பாளர்(ஓய்வு),
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.




## அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி. நளினி அகிலதாஸ் அவர்களின் மணி விழாவில் வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகிறேன். மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வியாகிய ஆரம்பக் கல்வியை வழங்குவதில் பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றி அவர்களை உயர்கல்வி நோக்கி வழிப்படுத்தியவர். 2000 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாசாலையில் அவருடன் சேவையாற்றிய காலத்தில கற்பித்தலில் அவரது திறமையையும் தேர்ச்சி மிக்க சேவையையும் அறியக் கூடியதாக இருந்தது.

மாணவர்களின் இயல்பறிந்து வெவ்வேறு கற்பித்தல் நுட்பங் களைக் கையாளுபவர். பாடசாலையில் ஆரம்பக் கல்விப் பாடமுகாம்களையும் கல்விக் கண்காட்சிகளையும் ஒழுங்கமைத்து நடத்துவதில் தலைமை தாங்கி செயற்படுபவராக விளங்கினார். விளையாட்டுப் போட்டிகளின் போது விளையாட்டுச் செயலாளராகவும் செயற்பட்டார். ஆரம்பக் கல்விப் பகுதித்தலைவராகவும் கடமையாற்றினார். இவர் தனது திறமையால் ஆசிரிய ஆலோசகராகப் பதவியுயர்வு பெற்று யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வித் துறைக்கு அளப்பெரும் சேவையாற்றினார். அவருக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இ.ராஜ்கரன், அதிபர்,
யா/வண்ணை ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலயம்,
ஆனைக்கோட்டை.



## ஜெறோம் அடிகளாரின் ஆசிச் செய்தி

திருமதி நளினி அகிலதாஸ் அவர்களின் மணிவிழா நாளில் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

புனித பத்திரிசியார் கல்லூயில் நான் பணியாற்றும் போது, அவர் யாழ்ப்பாண கல்வி வயை ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பணி செய்தமையை நான் நன்கறிவேன். மிகுந்த கரிசனையோடு அவர் பாடசாலை ஆரம்பப் பிரிவுக்கு சமூகமளித்து ஆசிரியர்களைச் சிறந்த முறையில் வழிப்படுத்தி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வியைச் சிறப்புறச் செய்தார்.

இருபத்திரண்டு வருடங்கள் பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராகவும், பதின்மூன்று வருடங்கள் வலிகாமம், யாழ்ப்பாணக் கல்வி வலயங்களில் ஆசிரிய ஆலோசகராகவும் சிறப்பாக பணிசெய்துள்ளார். முப்பத்தைந்து வருடங்கள் ஒரு தலைமுறையின் கல்வி உருவாக்கத்திற்கு அரும் பங்காற்றி இன்று அகவை அறுபதில் கல்விப் புலத்திலிருந்து விடைபெறும் போது அது கௌரவிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இவரது கணவர் திரு.அருணாசலம் அகிலதாஸ் அவர்களும் கல்விப் புலத்தில் அதிபராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக பொறுப்புடன் பணியாற்றியவர். அவரது ஆதரவும், உற்சாகமும் நளினியின் கல்விப்பணிக்கு மெருகூட்டியுள்ளது.

ஆரோக்கியமான, மகிழ்ச்சியான கற்றலுக்கு பிள்ளைகளை வழிநடத்த ஆசிரியர்களை நெறிப்படுத்தும் உன்னத சேவை செய்த வரை உளமார வாழ்த்தி இறையாசீர் வேண்டுகின்றேன்.

அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம்,
முன்னாள் அதிபர்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.



## நிறைவான சேவையை வழங்கியவர்

திருமதி.நளினி அகிலதாஸ் அவர்கள் 2011-2024 வரையான காலப்பகுதியில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி யுள்ளார். நான் கல்விமாணிப் பட்டப்படிப்பின் கற்பித்தல் பயிற்சியில் யா/ தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியில் ஈடுபட்ட வேளை, எனது கற்பித்தலை மதிப்பீடு செய்ய வருகை தந்த போது நான் இவரை முதன்முதலில் சந்தித்தேன். கற்பித்தல் மதிப்பீட்டுடன் நின்றுவிடாமல் மேலும் எந்தெந்த விடயங்களில் கற்றலை மேம்படுத்தலாம் என்பதனை அமைதியாகவும் பொறுமையாகவும் விளக்கியுள்ளார்.

நான் 2017 இல் யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்றபோது, அவ்வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றியுள்ளார். இவரின் அமைதியான போக்கு, மற்றவர்களுடன் முரண்படாத தன்மை என்பன சேவைக்கான அடையாளமாகக் காணப்பட்டது.

மாணவர் முகாம்கள், செயலமர்வுகள், போட்டிகள் என்பன வற்றில் தனக்கு கொடுக்கப்பட்ட செயற்பாட்டை முழுமையாக நிறைவேற்றியுள்ளார். வலயப் போட்டிகளுக்கான ஆவணங்கள், சான்றிதழ்கள் என்பனவற்றில் இவரின் கைவண்ணமே உள்ளன.

திருமதி. நளினி அகிலதாஸ் அவர்கள் அகவை அறுபதில் ஓய்வு பெறும் வேளை அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

பத்மநாதன் சசிகுமார்,
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணக்கல்வி வலயம்.



## செயல் வல்லமை கொண்டவர்

மணிவிழாக் காணும் திருமதி.நளினி அகிலதாஸ் அவர்கள் பத்து ஆண்டுகள் யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித் தியாலயத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.(1999-2009) அவர் வேக நடையும் குழந்தையுள்ளமும் கொண்டவர்.

எந்தச் செயலையும் சிறப்பாகச் செய்யும் வல்லமை வாய்க்கப் பெற்றவர். மாணவர்களின் தனித்திறமைகளை இனங்கண்டு விளையாட்டுத்துறையில் அவர்களை வளர்ப்பதில் வல்லவர். ஆரம்பக்கல்வி ஆசிரியராக இருந்தாலும் எமது பாடசாலையில் இடைநிலை மாணவ, மாணவியரை தனி விளையாட்டுக்கள், குழு விளையாட்டுக்களில் பயிற்றுவித்து போட்டிகளுக்கு அழைத்துச் செல்பவர்.

பாடசாலைக்கு அண்மையில் அவரது வீடு அமைந்திருந்ததால் மாணவிகளுக்கு வலைப்பந்தினை மாலை வேளையில் முழு மனதுடன் பயிற்றுவித்து கோட்ட, வலய மட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியும் பாராட்டுக்களும் பெற்றுள்ளார்.

அவரின் மணி மணியான கையெழுத்து அவருக்குப் பாடசாலையில் பல பொறுப்புக்களை வழங்கி இருந்த நிலைமைகளில் மிகவும் கடமைப் பொறுப்புடன் செயற்பட்டவர்.

அவரது ஓய்வுக்காலம் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புமாக நோய் நொடி இன்றி இன்பமாக அமைய வேண்டும் என எல்லாம் வல்ல நயினை நாகபூசணித்தாயை வேண்டி வாழ்த்துகின்றேன்.

செல்வி. கமலநாயகி கதிர்காமலிங்கம்,
ஓய்வு நிலை அதிபர்,
யா/ கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தி.



## ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை சிறப்பாக வழிப்படுத்தியவர்

யா/கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்று 22 வருடங்கள் ஆசிரியராகவும்,13 வருடங்கள் ஆசிரிய ஆலோசகராகவும் கல்விப்பணி புரிந்தவர்.

கோப்பாய்க் கோட்டத்தில் கல்வியில் பின்னடைவான பாடசாலைகளுக்கு விஜயம் செய்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஊக்கமளித்து சிறந்த வழிப்படுத்தலையும் செய்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக சித்தி பெற வழிப்படுத்தியவர்.

ஆசிரிய ஆலோசகருக்கு முன் உதாரணமாய், சகல உத்தியோகத்தருடனும் நட்புடன் பழகும் சக அலுவராகக் கடமை புரிந்தவர். தனது 60 ஆவது வயதில் அரசபணியில் இருந்து ஓய்வுபெறும் இவரின் ஓய்வுகாலம் சிறக்க யாழ் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சார்பாக வாழ்த்துகிறேன்.

து.துசியந்தன்.
தலைவர்,
யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சங்கம்.



## மாணவரின் அடைவினை உயர்த்த அர்ப்பணிப்போடு செயலாற்றியவர்

09.03..2024 அன்று அகவை அறுபதில் ஓய்வுபெறும் எமது கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி நளினி அகிலதாஸ் அவர்களை வாழ்த்துகிறேன்.

இவர் 13 ஆண்டுகள் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாண கல்வி வலய ஆரம்ப கல்வி செயற்பாடுகளுக்கு சக ஆலோசகர்களுடனும் உதவிக் கல்விப்பணிப்பாளருடனும் இணைந்து செயலட்டை தயாரித்தல், மாதிரி வினாத்தாள் தயாரித்தல், மாணவர் முகாம்களை நடத்துதல் உள்ளிட்ட செயலமர்வுகள் மூலம் மாணவரின் அடைவினை உயரத்துவதற்கான வழிமுறைகளுக்கு வழி கோலினார். வலயத்தின் கோப்பாய் கோட்ட தூர பாடசாலைகளை தரிசித்து ஆசிரியர்களுக்கான ஆலோசனைகளை வழங்கி வழிப்படுத்தி வந்தார். இவர் தனக்கென ஒதுக்கப்பட்ட வேலைகளை பொறுமையுடனும் நேர்தியுடனும் செய்ததை அவதானித்துள்ளேன்.

இவரது ஓய்வு காலம் சிறக்கவும் நோய் நொடி இன்றி வாழவும் இறைவன் அருள்புரிவாராக.

பொ.ரவிச்சந்திரன்.
வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.



## நேர காலம் நோக்காது பணியாற்றியவர்

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகின்றான்" குழந்தைகளுக்கு எழுத்தறி விக்கின்ற பணியினை இறைபணியாகக் கருதிப் பணியாற்றிய அம்மையாருக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இவர் ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றிய வேளையில் இவருடன் இணைந்து பணியாற்றுகின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. எல்லா மாணவர்களும் அடிப்படைக் கல்வியறிவினைப் பெறவேண்டும். ஆரம்பக் கல்வி மிக உறுதியாக அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்தது மட்டுமல்லாது, பல்வேறு உபாயங்கள், திட்டங்களை வகுத்து வழிப்படுத்தித் தானும் இணைந்து பணியாற்றிய அவருடைய சேவை மறக்கற்பாலது.

குறிப்பாக எங்கே பின்தங்கிய நிலையில் பிள்ளைகள் இருக்கின்றார்களோ அங்கே இவரது பணி அமையும். மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக்கல்விப் பிரிவிற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக நான் பணியாற்றிய வேளை, எமது பல செயற்பாடுகளுக்குப் பிரதான வளவாளராக திருமதி நளினி அகிலதாஸ் அவர்கள் பணியாற்றினார். நேரம் காலம் நோக்காது பணியாற்றினார். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பது முதுமொழி. அம் முதுமொழியினை இவரது வாழ்வில் நாம் காணலாம், காலம் நேரம் கருதாது இவ் அம்மையார் ஆற்றிய பணியால் இன்று அவரது பிள்ளைகள் கல்வியிலே விண்ணுயர்ந்து நிற்கின்றார்கள்.

இவரது கணவர் திரு.அகிலதாஸ் அவர்கள் வடக்கின் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளும் மறக்கற்பாலது.

"கோடி புண்ணியம் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" அப் பணியினை ஆற்றி ஓய்வுபெறும் அம்மையார் வாழ்வு மேலும் சிறக்க இறையருள் வேண்டுகின்றோம்.

க.மணிமார்பன்.
பிரதிக் கல்விப் பணிப்பாளர். தேசிய பாடசாலைகள் பிரிவு.
கல்வி அமைச்சு, இசுறுபாய



## தன் பணிமீது பற்றுதி கொண்டவர்

புண்ணியம் சேர் தொழிலாம் ஆசிரி யத் தொழிலில் அரும்பணியாற்றி அகவை அறுபதில் மணிவிழாக்கண்டு ஓய்வு பெறும் ஆசிரியர். ஆசிரிய ஆலோசகர் திருமதி. நளினி அகிலதாஸ் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஓர் சிறந்த ஆசிரியராக, ஆசிரியர் வழிகாட்டியாக, பாசமிகு தாயாக, பொறுப்புமிகு குடும்பத் தலைவியாக அவரை நான் காண்கின்றேன். ஆசிரியத் தொழில் மீது அவர் கொண்ட பற்றும் தனது வாண்மையை பயனுறுதியாக்குவதிலான அவரது ஆவலும் முயற்சியும் நான் அறிவேன். வருகை விரிவுரையாளராகக் கல்வி முதுமாணிக் கற்கை நெறியில் பணியாற்றும்போது அவரது கல்வியியல் ஆவலை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அவர் தன் ஆசிரியத் தொழிலில் குடும்ப வேலைகளுக்கு அப்பாற்பட்ட பற்றுறுதியுடையவர். "பிறர் பிள்ளை தலை தடவ தன்பிள்ளை தானே வளரும்" என்னும் ஆன்றோர் வாக்கிற்கு இணங்க அவரது பிள்ளைச் செல்வங்கள் மூவரும் நவீன கல்வியுலகில் உச்சம் தொட்டவர்கள். திருமதி. நளினி அகிலதாஸ் அவர்கள், அவரது துணைவர் திரு.அ.அகிலதாஸ் அவர்களின் சிறந்த வழிகாட்டல் வாய்ப்பையும் பெற்றிருந்தமை அவரது சமநிலை ஆளுமைக்கு ஆதாரமானது எனலாம். அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் எண்ணங்கள் ஈடேறவும் வாழ்த்துகின்றேன்.

கலாநிதி. செ.சேதுராஜா.
ஓய்வு நிலை அதிபர்.



## ஆரம்பக் கல்வியை நேசித்தவர்

நான் வலிகாமம் கல்வி வலயத்தில் கடமையாற்றிய காலப் பகுதியில் ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்று வந்தவர் திருமதி நளினி அகிலதாஸ். அப்போது ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றிய அனுபவம் இல்லாவிடினும் தனது ஆசிரிய சேவை அனுபவ முதிர்ச்சியின் காரண மாக ஆசிரிய ஆலோசகர் சேவையை மிக வினைத்திறனுடன் முன்னெடுத்தார்.

நளினி அகிலதாஸ் அவர்கள் ஆரம்பக்கல்வியை நேசித்த ஒருவர். தனது உன்னத சேவையால் கல்வித் துறைசார்ந்த அனைவரினதும் அன்பையும் பாராட்டையும் பெற்றிருந்தார். தனது சேவைக்காலத் தில், ஆரம்பக்கல்வித்துறை வளர்ச்சிக்குப் பொருத்தமற்ற செயற்பாடு களை யாரேனும் முன்னெடுப்பின் அதை நேரடியாகத் தெரிவித்து விடுவார். மேலதிகாரிகள் ஆயினும் அவர்கள் புண்படா வண்ணம் தனது கருத்தைத் தெரிவித்துவிடுவார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்பது வள்ளவர் வாக்கு. இதற்கிணங்க முத்தான மூன்று புதல்வர்களையும் தனது உன்னதமான கல்விச் சேவையையும் எச்சமாகத் தந்தவர் நளினி அகிலதாஸ் அவர்கள். அவரும் அவரது அன்புத் துணைவர் அகிலதாஸ் அவரது புதல்வர்கள் அனைவரும் என்றென்றும் நலமாகவும் சிறப்பாகவும் வாழ எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

ஆ.ராஜேந்திரன்
முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர்.
வடமாகாணம்.

(c-8498)



திருமதி

பிறப்பு- 1
பிறப்பிடம்
கல்வி: அ
உயர்கல்வி
ஆசிரிய
யா/எழுது
யா/எழுது
கோப்பாய்
யா/மிருசு
யா/கொக்
யா/கொக்
ஆசிரிய
ஆசிரிய
ஆசிரிய
கணவர்
அருணாச
ஓய்வுநிலை
ஓய்வுநிலை
பிள்ளை
அ.புருசே
(மென்பெ
அ.விமோ
அ.சங்கீத
மருமக்க
Dr.சதுரி
Dr.நிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த்தின் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்

# ...ின் மணிவிழா சிறப்பு மலர்-09.03.2024



# திருமதி. நளினி அகிலதாஸ்

**S.L.TAS-I**

ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி),
யாழ்ப்பாண கல்வி வலயம்

பிறப்பு- 1964.03.09
பிறப்பிடம், வாழ்விடம்: கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
கல்வி: ஆரம்ப இடைநிலைக்கல்வி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி (1970-1982)
உயர்கல்வி மற்றும் தொழில் தகைமை - B.Ed, M.Ed பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி

**அரச பதவிகள்**

**ஆசிரியராக**
யா/எழுதுமட்டுவாள் சி.சி.த.க பாடசாலை 1988-1989
யா/எழுதுமட்டுவாள் கணேச வித்தியாலயம் 1989-1990
கோப்பாய் ஆசிரிய கலாசாலை 1991-1992
யா/மிருசுவில் றோ.க.த.க பாடசாலை 1993-1998
யா/கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம் 1999-2009
யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் 2009-2011
ஆசிரிய ஆலோசகர் வ.க.அலுவலகம், வலிகாமம் 2011-2013
ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாண கல்வி வலயம் 2013-2024

**ஆசிரியராக 22 வருடங்கள், ஆசிரிய ஆலோசகராக 13 வருடங்கள்**

**கணவர்**
அருணாசலம் அகிலதாஸ். (B.A, Dip. in Ed, M.Ed, SLPS - I, SLEAS, JP)
ஓய்வுநிலை அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி,
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்பாணக் கல்வி வலயம்,

**பிள்ளைகள்**
அ.புருசோத்மன் B.Sc(Eng), M.Sc(Eng) (U.S.A)
(மென்பொறியியலாளர் (U.S.A)
அ.விமோசனன் B.Sc (Eng) M.Sc (Eng) (U.S.A)
அ.சங்கீதன் பொறியியல் பீடம் (மொறட்டுவ பல்கலைக்கழகம்)

**மருமக்கள்**
Dr.சதுமி புருசோத்மன் - விரிவுரையாளர் (U.S.A)
Dr.நிந்துஜா விமோசனன் - B.S.M.S

## ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் வழிகாட்டி



திருமதி. நளினி அகிலதாஸ் அவர்கள் 22 வருடங்களாக ஆயிரக்கணக்கான மாணவர்களிற்கு ஆரம்பக்கல்வி புகட்டி 13 வருடங்களாக பல நூற்றுக்கணக்கான ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிற்கு கற்பித்தலுக்கு வழிகாட்டியாகி, அதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஆரம்பக்கல்வியில் சிறந்து மிளிர அடித்தளமாய் விளங்கியவர். அவரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துவதோடு அவர் நீண்ட ஆயுளோடு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

து.சுவீதன்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்

## இலக்கை அடையும் வரை ஓயாது உழைப்பவர்



திருமதி நளினி அகிலதாஸ் எதையும் கள்ளங் கபடமின்றி வெளிப் படையாகக் கதைப்பவர். அவர் செய்யும் வேலையில் எப்போதும் நேர்த்தியும் தூய்மையும் கலந்திருக்கும். தனது வீட்டைப் போலவே பாடசாலைகளையும் அலுவலகத்தையும் நேசிப்பவர். எவருடனும் கோபிக்காத சுபாவமுடையவர். தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை உரிய காலத்தில் நிறைவேற்றுபவர். எல்லோருடனும் சிநேகபூர்வமாகப் பழகுபவர்.

ஆரம்பப் பிரிவுப் போட்டிகள், பரீட்சைகள், மாணவர்களின் தனிப்பட்ட அடைவுமட்டம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி உரிய இலக்கை அடையும் வரை ஓயாது உழைப்பவர். கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள தூரம் கூடிய பாடசாலைகளில் தூரத்தைப் பாராது அயராது உழைத்தமையால் 2015 ஆம் ஆண்டுக்குப்பின்னர் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 143 பிள்ளைகளை சித்தி பெற வைத்தவர்களுள் ஒருவராவர்.

இவரது துணைவரான திரு.அ.அகிலதாஸ் அவர்கள் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளராக கடமை ஆற்றிய வேளையில் தரம்-5 அடைவு மட்டத்தை உயர்வடைய செய்ய மேற்கொண்ட செயற் றிட்டமான செயலட்டைகள், மாதிரிவினாத்தாள், சுற்றாடல் முகாம்கள் போன்ற செயற்பாடுகளுக்கு திருமதி.நளினி அகிலதாஸ் அவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றியமையால் அவரது துணைவருக்கு உறுதுணையாக இருந்தது. இம் மணிவிழா நாளில் திருமதி. நளினி அகிலதாஸ் அவர்கள் எல்லா நலன்களும் பெற்று மன அமைதியுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நா.சிவநேசன்.
கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்.

## ஆற்றலும் ஆளுமையும் மிக்கவர்



தனது தொழில் வாழ்வையும் குடும்ப வாழ்வையும் மிகநேர்த்தியாகச் செய்த ஒருவராக நான் நளினியைப் பார்க்கிறேன். சிலர் தொழிலைச் சிறப்பாகச் செய்து குடும்ப வாழ்வில் குறையேற்படுத்தி விடுகின்றனர். வேறு சிலர் குடும்ப வாழ்வுக்கு முக்கிய மளித்து தொழிலில் பிரகாசிக்கத் தவறிவிடுகின்றனர். ஆனால் நளினி தனது ஆசிரியப்பணியிலும் ஆசிரிய வழி காட்டல் பணியிலும் பிரகாசித்தது போல. சிறந்த குடும்பத் தலைவியாகவும் சமகாலத்தில் பிரகாசித்துள் ளார். அவர் நல்ல ஆசிரியையாக இருந்ததினால் ஆசிரியர்களுக்கே நல்வழிகாட்டும் ஒருவராக உயர்ந்தார். ஆசிரியர்களால் விரும்பப்படும் ஒருவராகத் திகழ்ந்தார். அதேபோல நல்ல குடும்பத் தலைவியாக இருக்கிறார் என்பதற்கு அவரது கணவனின் கல்விப்பணிக்கான புகழும் பிள்ளைகளின் கல்வி மற்றும் நல்வாழ்க்கை என்பவற்றின் உயர்வும் தக்க சான்றுகள்.

குடும்பத்தின் அமைதி என்பது குடும்பத் தலைவியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. அந்தவகையில் நளினி சிறந்த மனைவியாகவும் தாயாகவும் தனது வகிபங்கை வெளிப்படுத்தியதாலேயே கணவன் புகழ்பெறவும் பிள்ளைகள் உயர்நிலை அடையவும் முடிந்தது என்பது அக்குடும்பத்துடன் நெருங்கியவன் என்ற வகையில் என் பட்டறிவு. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று கூறுவர். நண்பன் அகிலதாஸின் வெற்றிகளுகளுக்குப் பின்னால் இருந்தவர் நளினி. தென்மராட்சியில் கச்சாய் மகாவித்தியாலயத்தில் தொடங்கி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி என அகிலதாஸ் அதிபராகப் பணியாற்றிய அத்தனை பாடசாலைகளிலும் தனது புகழை நிலைநாட்டுவதற்கு பெரிதும் துணை நின்றவர் நளினி ஆவார். அதேபோல நளினியின் சாதனைகளுக்கு அகிலதாஸ் உறுதுணையானார் என்பதும் நிதர்சனமானது. தங்களின் மூன்று பிள்ளைகளையும் பொறியியலாளராக்கி இன்று இருவர் ஐக்கிய அமெரிக்காவில் உயர்கல்வி மற்றும் உயர் பதவிகளை வகிப்பதற்கு ஊன்றுகோலாகவும் ஏணியாகவும் இருந்தவர் நளினி அவர்கள்.

காதல் கடிமணம் புரிந்ததினால் தொடக்கத்தில் சில கடினங்களை சந்தித்தாலும் தளராத மனத்துடன் மகிழ்வான, மதிப்பான குடும்பத்தை நிலைநாட்டி வெறுத்தவர்கள் எல்லோரையும் விரும்பி உறவாட வைத்த அவரது வைராக்கியம் எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. அவ்வகையில் அவரது வாழ்க்கை இன்றைய யுவதிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும். வாழ்க மகிழ்வுடன் பல்லாண்டு.

க.அருந்தவபாலன்.
குடும்ப நண்பர்.
சமூக செயற்பாட்டாளர்- சட்டத்தரணி.

## என் இனிய தோழிக்கு...



அன்பான சிறுவயது நட்புகளின்
அரவணைப்பில் நீயும்
"ஆறுபத்தை" நிறைவுசெய்தே
அடுத்த அடி வைத்தாய்!
இன்று உந்தன் பிறந்தநாளில்
மனம் நிறைந்த வாழ்த்தை
இன் தமிழில் சொல்லிடுவேன் ஏற்றுக்கொள்வாயே!
என்றும் நீ உடல்நலமும் உளநலமும் பெற்றே
எழுகதிராய் புவிதனிலே வலம் வர வேண்டும்!
பொன் போலும் மிக்கொளிரும் பண்பிலுயர் தோழியே நீ
அகிலத்தில் பேரோடும் புகழோடும் வாழியவே!!
சீர்திருத்தும் எண்ணத்தில் அது குறித்தே பாடும்!
சத்தியத்தின் வழிநின்று அறிவுரைகள் சொல்லும்
சமத்துவத்தை வலியுறுத்தி நற்படைப்பு நல்கும்!
முப்போதும் முழுவீச்சில் வாட்டத்தைப் போக்கும் !
தித்திக்கும் தமிழன்னை ஆசிகளால் நீயும்
சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு வாழி!!
உனைப் பெற்றெடுத்த அன்னை மனம் ஈரவிழியுடனே எங்கிருந்த போதும்
உனை அன்போடு வாழ்த்தும்!!!
வான்மேகம் குளிர்ந்து வந்து வாழ்த்து மழை தூவும்
வளர்நிலவும் வழிமொழிந்து உன்னை தண்ணொளியால் வாழ்த்தும்!
மேன்மைமிகு வித்தகியே உன் பெருமை விண் பேச வேண்டும்!
தேன்தமிழ் போல் இனிமையுடன் இளமையொடு நாளும்
திக்கெட்டும் புகழ்மணக்க நூறாண்டு வாழி !!

திருமதி. சுகந்தி ஸ்ரீதாஸ்.
சுவிஸ்லாந்து (1982 உயர்தர நண்பி)

## ஆரம்பக் கல்வி மாணவர்களுக்காக அரும்பணியாற்றியவர்



திருமதி.நளினி அகிலதாஸ் அவர்கள் முப்பத்தைந்து வருடங்களிற்கு மேலாக கல்விச் சேவையாற்றி ஓய்வு பெறுவதையிட்டு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவு சார்பாகப் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். 2011 ஆம் ஆண்டு ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்வாங்கப்பட்டு 2013 ஆம் ஆண்டிலிருந்து 08.03.2024 வரை கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஆரம்பக் கல்விக்கான ஆசிரிய ஆலோசகராக மிகச் சிறப்பாகக் கடமையாற்றியுள்ளார். இவர் ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்விக்காக அரும்பணியாற்றி யுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் அண்மைக் காலமாக முன்னிலையில் திகழ்கின்றது. 2023 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது வலயமாக யாழ்ப்பாண வலயம் பெற்றிருந்தது. இதற்கான இவரது பங்களிப்பை மறந்து விட முடியாது.

திருமதி.நளினி அகிலதாஸ் அவர்கள் நீண்ட ஆயுளுடனும் குடும்பத்தினருடனும் ஆரோக்கியமாகவும் மகிழ்வுடனும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கவேலு பால்ராஜ்.
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி).
யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்.

## ஆசிரிய கலாசாலை பெருமையடைகிறது



1991 - 1992 காலப்பகுதியில் கலா சாலையில் கற்ற திருமதி நளினி அகிலதாஸ் அவர்கள் கலாசாலைக்குப் பெருமை தேடித்தரும் மாணவர்களுள் ஒருவர் ஆவார். கல்விமாணி, முதுகல்விமாணி என உயர்பட்டங்களைப் பெற்ற பெருமைக்குரியவர். கலாசாலையில் ஆரம்பக் கல்வித்துறை சார்ந்த ஆசிரிய பயிற்சியைப் பெற்று நல்லாசிரியராக 22 வருடங்களும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக 13 ஆண்டுகளும் பணியாற்றி ஓய்வு காண்கிறார்.

திருமதி நளினி அகிலதாஸ் அவர்கள் ஆசிரிய ஆலோசகராக பல்வேறு பாடசாலைகளுக்குச் சென்று ஆசிரியர்களை வழிப்படுத்துவதை சுமையாக எண்ணாமல் சுகமாக நினைத்துச் செயற்பட்டார். அவரது கணவர் திரு. அ.அகிலதாஸ் தமிழ்ச் சமூகம் நன்கறிந்த கல்வி நிர்வாகி. அவரது உறுதுணை அம்மையாரின் வெற்றிக்கு வலுச் சேர்த்திருக்கிறது. தங்களது மூன்று பிள்ளைகளையும் பொறியியலாளர்களாக உயர்த்தியதோடு தாங்களும் கல்வியுலகிற்கு அளப்பரிய சேவைகளை நல்கி கற்றோர் மனங்களில் உயர்ந்து நிற்கின்றனர்.

கல்வி உலகோருக்கு முன்னுதாரணர்களாக இத்தம்பதியர் விளங்குகின்றனர் என்றால் மிகைப்படாது. நளினி அம்மையாரின் மணிவிழா மாண்புறவும் ஓய்வுக்காலம் இனிதே அமையவும் அவர் என்றும் நேசிக்கும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தின் சார்பில் இனிய நல்வாழ்த்தைத் தெரிவிப்பதில் உவகையுறுகிறோம்.

சந்திரமௌலீசன் லலீசன்.
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

## நவரச நண்பிகள் நாங்கள்...



மணிவிழாக் காணும் திருமதி. நளினி அகிலதாஸ் அவர்கள் எம்முடன் தரம் ஒன்றில் இருந்து க.பொ.த உயர்தரம் வரையில் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் (1970-1982 வரையான காலப்பகுதியில் ஆரம்பப் பாடசாலை தனித்து இயங்காத காலப்பகுதி) கல்வி கற்றாலும் தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான காலப்பகுதி ஓர் மறக்க முடியாத பருவம் ஆகும். அப்போது 6A- 10A என்ற பிரிவுகளில் 9 பெண் பிள்ளைகளும் மீதி ஆண்களுமான கலவன் வகுப்பறையில் கல்வி கற்ற அனுபவம் என்பது போட்டி மனப்பாங்குடன் கற்றல் இடம்பெற்றது. ஆசிரியர் பாடங்களுக்கு வருகை தராத வேளையில் சிறு விளையாட்டுக்களில் ஈடுபடுவோம். இவற்றை விட தனியார் கல்வி நிறுவனமான "பொன்னையா மாஸ்டர்" இலும் கல்வி கற்று வந்தோம். ரியூசன் முடிந்த பின் நாங்கள் எல்லோரும் சுகிர்தா வீட்டில் கிளித்தட்டு விளையாட்டில் ஈடுபட்டதன் பின் மாலை மங்கும் வேளைகளில் வீடுகளுக்குச் செல்வோம்.

வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற தினங்களில் எல்லா நண் பிகளின் வீடுகளுக்கும் செல்வோம். நாட்டில் மக்கள் புலம்பெயர்ந்த வேளையில் எங்களுடன் கற்ற ஆறு நண்பிகள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தோம். நளினி மற்றும் கலைவாணி, நளாயினி ஆகியோர் தாம் பிறந்த நாட்டிலேயே உயர்கல்வி கற்று அரச சேவையில் ஈடுபட்டு அகவை அறுபதில் ஓய்வுபெறும் இவ்வேளையில். அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருமதி. சுகிர்தா நித்தியானந்தன் (கனடா),
நவரச நண்பிகள் சார்பாக.

## வான்புகழ் பெற்று வாழி!

மணிவிழாக்காணும் எம்மினிய மச்சாளே
மனம் மகிழ்ந்து தருகின்றோம் வாழ்த்துக்கள் நூறு
செல்லத்துரை பூமணியின் செல்ல மகளாகவும்
உடன்பிறந்த சகோதரங்களுக்கு பாசம் மிகுந்தவளாய்
கரம்பற்றிய அகிலதாஸ் அவர்களின் காதல் இளவரசியாய்
வலம்வந்து புருசோத்தமன், விமோசனன், சங்கீதன்
ஆகியோரை பெற்றெடுத்து சிறந்த இல்லத்தரசியாய்
மைத்துன மைத்துனிகளுக்கு உற்ற தோழியாகவும்
வாழ்ந்து வரும் உங்களை வாழ்த்துக் கவி
கொண்டு வாயார வாழ்த்துகிறோம்.



வான்புகழ் பெற்று வாழி
எங்களது இனிமையான மைத்துனியே
அகவையது அறுபதைத்தான்
இன்பமாய் தாண்டிடும் இந்நாளில்
ஏது கூறி வாழ்த்துவோம்
இனிமையே இதயத்தில் என்றும்

இரக்கமே நெஞ்சமெல்லாம்
புன்னகை முகமும் பூத்துப் பொங்கிடும் அன்பும்
தன்னலம் கருதாத குடும்பப் பற்றும்
கல்லும் கரைந்திடும் கனிவான உந்தன் பேச்சும்
நாழிகை தோறும் நல்ல நட்பைப் பெற்ற
எம் மைத்துனியை நாமும் வாழ்த்துவோம்
நலமோடு நீடுழி வாழ...

உனக்கு வயது அறுபதா? நம்பவே முடியாது
என்றும் இளமை எதிலும் இனிமை
உன்னோடு பழகுவது என்றும் பசுமை
பாசம் கொண்டு அரவணைப்பதில்
உனக்கு நிகர் நீயேதான்
அறுபதின் மணிவிழா இன்று பொலிந்து
முத்துவிழா நூற்றாண்டு விழாவென
நன்கல விழாக்கள் கண்டு மகிழ
மனதார வாழ்த்தி மகிழ்கிறோம்
வாழ்க பல்லாண்டு! வாழிய நூறாண்டு!
வாழ்க வளமுடன்!!!

அன்புடன் இனிதே வாழ்த்தும்
இராஜாஜி சுமதி (கனடா).

மணிவிழா மலர் அனுசரணை:-இராஜாஜி சுமதி தம்பதிகள் (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 700 மெகாவாட்ஸ் மின்சார திட்டத்துக்கு கிளிநொச்சியில் அனுமதி

(கிளிநொச்சி)

11 சிறிய குளங்களை இணைத்து பூநகரிக் குளமாக்குதலும் 700 மெகாவாட்ஸ் மின்சாரம் பெறும் மிகப்பெரிய திட்டத்தை நடைமுறைப்படுத்த மாவட்ட அபிவிருத்திக் குழு அங்கிகாரம் வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலே முன்மொழியப்பட்டு அமைச்சரவை அனுமதித்த திட்டம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 சிறிய குளங்களை ஒன்றாக இணைத்து பூநகரி குளம் அமைக்கப்படவுள்ளது. 2013ஆம் ஆண்டளவில் இத்திட்டம் நீர்பாசனத் திணைக்களத்தால் முன்மொழியப்பட்டது.

ஆனாலும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார, அரசியல் சூழல் காரணமாக அத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

மண்டக்கல்லாறு, குடமுருட்டி, செம்மங்குன்று பகுதிகளால் நீர் கடலுக்கு செல்கிறது. இதை மறித்தே இத்திட்டம் வரையப்பட்டது. மண்டக்கல்லாறு முதல் குடமுருட்டி வரை இணைத்து 20 கிலோ மீற்றர் கட்டு அமைக்கப்பட்டு பூநகரிக்குளம் உருவாகவுள்ளது. இதற்கிடையில் காணப்படும் 11 குளங்கள் இத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளது. ஏறத்தாழ 9000 ஏக்கர் அளவில் குறித்த குளம் அமையவுள்ளது.

இக்குளம் அமைக்கப்படும் சமவேளையில், குளத்தின் நடுவில் 700 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய மின் உற்பத்தி நிலையம் அமையவுள்ளது.

1280 ஏக்கர் கொண்ட பிரதேசத்தில் சோளர்கள் பொருத்தப்படவுள்ளது. இதன் ழுலம் நாட்டின் மின் உற்பத்தியில் பெரும்பகுதி இத்திட்டத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

(நி-6-271-350)

# யானை வேலிகளை அமைக்க துரித நடவடிக்கை எடுங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடு தொடக்கம் முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தொட்டியடி வரை யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் விசுவமடுவில் இருந்து உடையார்கட்டு தெற்கு வரை அமைக்கப்பட வேண்டிய யானை வேலி அமைக்கப்படாததன் காரணமாக இளங்கோபுரம், தேராவில், குரவில், மாணிக்கபுரம், வள்ளுவர்புரம், நாச்சிக்குடா போன்ற பல கிராமங்களுக்கு உள்நுழையும் யானைகள் பயிர் அழிவுகளை தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகின்றன.

புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக யானை வேலிகள் அமையுங்கள் என கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அமைக்கப்படவில்லை. எனவே குறித்த கிராமங்களுக்கான யானை வேலிகளை அமைப்பதற்கு உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-250)

# வீதித்தடை அமைக்கக்கோரி அடம்பனில் கவனயீர்ப்பு



(மன்னார்)

மன்னார் அடம்பன் பிரதான வீதியில் உள்ள நாற்சந்தி பகுதியில் வீதித் தடை ஒன்றை உடன் அமைத்து தருமாறு கோரி அடம்பன் பகுதி மக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வீதிகளை மறித்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

அடம்பன் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் டிப்பர் வாகனம் மோதி அருட்தந்தை ஒருவர் பலியான நிலையில் தொடர்ச்சியாக குறித்த வீதியில் விபத்துக்கள் இடம் பெறுவதாகவும் காபைட் வீதி என்ற காரணத்தினால் வாகனங்கள் வேகமாக பயணிப்பதாகவும் எனவே குறித்த வீதியில் வீதித் தடை ஒன்றை அமைக்குமாறு கோரி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த உதவி மாவட்ட செயலாளர், உதவிப்பிரதேச செயலாளர், பிரதேச சபை செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்று பொறியியலாளர், பொலிஸார் பொது மக்களுடன் கலந்து பேசி விரைவில் விபத்துக்கள் ஏற்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்த நிலையில் மக்கள் போராட்டத்தை அமைதியான முறையில் கைவிட் டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

(நி-6-285)

# துரைராசா ரவிகரன் பயணித்த வாகனம் விபத்து

(நெளுக்குளம்)

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பயணித்த வாகனம் முள்ளிவாய்க்கால் பகுதியில் விபத்துக்குள்ளானது. நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குறித்த விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த கார் முள்ளிவாய்க்கால் பகுதியில் சென்று கொண்டிருந்த போது காரின் சில்லுக்கு காற்று குறைவடைந்ததன் காரணமாக திடீரென வீதியை விட்டு விலகிச் சென்று விபத்துகுள்ளானது. எனினும் காரில் பயணித்த எவருக்கும் எவ்விதமான காயங்களும் ஏற்படவில்லை.

(நி-6-2[illegible])

# இன்று ஒரு தகவல் 59



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அலுமினியம்

ஒரு கல்யாணத்திற்கு போகவேண்டி இருந்தது. பெண், மாப்பிள்ளைக்கு என்ன பரிசு கொடுக்கலாம்? என்று ஒருவர் கேட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு அலுமினியக் கிண்ணத்தை வாங்கிக் கொண்டு போய்க் கொடுங்கள் என்றா சொல்லுவீங்க?

அப்படி யோசனை சொன்னால் உங்களையே ஒரு மாதிரியாகப் பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். நல்லாத்தானே இருந்தவர் ஏன் இப்படி ஆகிவிட்டார் என்று.

அலுமினியம் என்று சொன்னாலே தாழ்வாக நினைக்கும் அளவுக்கு அலுமினியம் ஒரு தாழ்வான பொருளாகப் போய்விட்டது.ஆனால் நூறு வருடத்திற்கு முன்பு இப்படி ஒரு யோசனை சொல்லியிருந்தால் உங்களை யாரும் தப்பாக நினைத்து இருக்க மாட்டார்கள்.

நூறு வருடத்திற்கு முன்பு தாய்லாந்து மன்னர் பிரான்ஸுக்கு போயிருந்தார். அப்போது அவருக்கு பிரெஞ்சு சக்கரவர்த்தி மூன்றாம் நெப்போலியன் ஒரு பரிசு கொடுத்தார்.

என்ன பரிசு தெரியுமா? அலுமினியத்தினால் செய்த ஒரு கைக்கடிகாரச்செயின். தாய்லாந்து மன்னருக்கு இதில் மிக்க மகிழ்ச்சி. அந்த உயர்ந்த பரிசை மிகவும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்.

அந்தக் காலத்திலே அலுமினியத்தின் விலை தங்கத்தை விட அதிகம். தங்கம் வெள்ளியை விட அலுமினியத்தை உயர்வாகக் கருதிய காலம் அது. அலுமினியத்திற்கு அப்படி ஒரு நேரம். அதுக்குக் காரணமும் இருந்தது. பாக்ஸைட் என்பது அலுமினியம் இருக்கிற ஒரு தாதுப்பொருள். அதிலேயிருந்து அலுமினா என்கின்ற அலுமினியம் ஒக்சைட்டை பிரித்து எடுக்க வேண்டும். இப்படி பிரித்து எடுக்கும் முறை அதிக காலத்திற்கு முன்பே தெரிந்து இருந்தது. அதிலே ஒன்றும் துன்பம் இல்லை.

ஆனால் அலுமினியத்திலிருந்தே அலுமினிய உலோகத்தைப் பிரித்து எடுப்பது என்பது மிகவும் துன்பமான காரியமாகிவிட்டது. அலுமினியம் என்கிற தனிமத்துக்கும் ஒக்சிசனுக்கும் இடையிலே உள்ள பிணைப்பு மிகவும் நெருக்கம்.

விஞ்ஞானிகள் எல்லாம் எவ்வளவோ முயற்சி செய்து செய்து பார்த்தார்கள்.

ஒக்சிசனை விரட்டி விட்டு அலுமினியத்தை தனியாக எடுக்க முடியவில்லை. டென்மார்க்கிலே ஒரு விஞ்ஞானி. அவர் பெயர்.எச்.ஓயர்ஸ்டெட். 1825 இல் அவர் மிகவும் துன்பப்பட்டு ஒரு வழியைக் கண்டுபிடித்தார். சிரமப்பட்டு கொஞ்சம் அலுமினிய உலோகத்தை தயார் செய்தார்.

அதற்கு பிறகு ஜேர்மனில் ஒரு விஞ்ஞானி- .' பிரீரிஸ்வோஹ்லர். அவர் ஒரு வழியிலே அலுமினியத்தைப் பிரித்து எடுத்தார். இவர்கள் இரண்டு பெயரும் எடுத்த அலுமினியம் மிகவும் சுத்தமானது என்று சொல்ல முடியாது.

குறைந்த செலவிலே சுலபமான முறையிலே அலுமினியத்தை எடுப்பது விஞ்ஞானிகளுக்கு ஒரு பெரிய சவாலாகவே இருந்தது.

1886 இல் தான் அதற்கு நேரம் வந்தது. அமெரிக்காவிலே சார்லஸ் மார்ட்டின் ஹால் என்று ஒரு மாணவர். ஒரு சுலபமான-சிக்கனமான முறையில் கண்டுபிடித்தார். இதிலே ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? அதே சமயத்திலே பிரான்ஸிலே பால் ஹெரூல்ட் என்ற இளைஞர் ஒருவரும் இதையே கண்டுபிடித்தார்.அதுக்கு பிறகு என்ன?

உலகத்திலே அலுமினிய உற்பத்தி அதிகமாக போய் விட்டது. அதோட விலையும் சரிந்து போய்விட்டது. அலுமினியம் விஞ்ஞானிகளுக்கு விட்டிருந்த சவாலை சமாளித்து இப்ப நான் உங்களுக்கு ஒரு சவால் விடுகிறேன். அதாவது கல்யாணமான கணவன்மார்களுக்கு இந்த சவால். அதாவது... ஒன்றும் இல்லை....நீங்கள் தைரியமா உங்க மனைவி முன்னால் போய் நின்று உனக்கு அலுமினியத்திலே ஒரு செயின் செய்து போட ஆசைப்படுகிறேன். என்று சொல்லி விட்டு திரும்பி வந்து விடனும் அவ்வளவு தான் என்ன தயாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி

## வாழ்த்துகின்றோம்



எமது சங்கத்தின்
எரிபொருள் நிரப்பு நிலையத்தை
பளை நகரத்தில் மீள அமைப்பதற்கு
**கௌரவ கடற்றொழில் அமைச்சர்**
அவர்களது பெரு முயற்சியால்
அனுமதி கிடைக்கப்பெற்றுத்
தந்தமைக்கமைய
**09.03.2024ம் திகதி**
**சனிக்கிழமை**
**முற்பகல் 8.00 மணி**
**தொடக்கம் 9.20 மணி**
**வரையுள்ள**
**சுபவேளையில்**
**கடற்றொழில் அமைச்சரும்**
**கிளிநொச்சி யாழ்ப்பாண**
**மாவட்ட ஒருங்கிணைப்புக்**
**குழுத் தலைவருமான**

## கௌரவ டக்ளஸ் தேவானந்தா

**அவர்களால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பதில்**
**பெருமகிழ்வடைகின்றோம்.**

மேலும் அவர்களின் சேவை மென் மேலும்
பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கிடைக்க
இறைவனின் நல்லாசிகளை வேண்டி
பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைவதுடன்
இந் நிலைய அனுமதியினை பெற்றுத் தருவதற்கு
அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த
நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்

**பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பளை**

(C-8497)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 426





இச்சமயத்தில் வந்தியத் தேவன், குறுக்கிட்டு, "பல்லவ தளபதி கூறுவது முற்றும் உண்மை. நானே என் கண்களால் பார்த்தேன். சக்கரவர்த்தியைச் சிறையில் வைத்திருப்பது போலத்தான் பழுவேட்டரையர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பமின்றி யாரும் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாது பேச முடியாது. நான் ஒரு வார்த்தை சொல்லத் துணிந்ததற்காக என்னை அவர்கள் படுத்திய பாட்டை நினைத்தால் அப்பா! சின்னப் பழுவேட்டரையரின் இரும்புக்கை பற்றிய இடத்தில் இன்னும் எனக்கு வலிக்கிறது!" என்று கூறித் தன் மணிக்கட்டைத் தடவிக் கொண்டான்.

"அப்படிச் சொல், வல்லவரையா! உன்னை என்னமோ வென்று நினைத்தேன். இளவரசருக்கும், சேனாதிபதிக்கும் இன்னொரு முறை நன்றாக எடுத்துச் சொல்!" என்றான் பார்த்திபேந்திரன்.

இளவரசர், "வேண்டாம் அவர் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டார்!" என்று கூறி, வந்தியத்தேவனைப் பார்த்து, "ஐயா! நீர் அந்தப் பெண்ணைப் போய் அழைத்து வருவதாகச் சொன்னீரே! ஏன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறீர்? அவள் கொண்டு வந்த செய்தியை அவள் வாய்மொழியாகவே விவரமாகக் கேட்கலாம்! கொஞ்சம் கிறுக்குப் பிடித்த பெண்போலத் தோன்றுகிறது. எப்படியாவது நல்ல வார்த்தை சொல்லி அவளை இங்கே அழைத்து வாருங்கள்!" என்றார்.

"போகிறேன், இளவரசே! போய் அழைத்து வருகிறேன். பழுவேட்டரையர்களிடம் தாங்கள் சிறைப்படுவது என்பதை மட்டும் என்னால் சகிக்க முடியாது. என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் அது நடவாத காரியம்!" என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் சென்றான்.

"சேனாதிபதி தங்களுடைய கருத்து என்னவென்று சொல்லவில்லையே?" என்று அருள் மொழிவர்மர் கேட்டார்.

"என்னுடைய கருத்து இது தான். பழுவேட்டரையர்கள் அனுப்பியிருக்கும் ஆட்களைத் தாங்கள் சந்திக்கக் கூடாது. பார்த்திபேந்திரன் கொண்டு வந்திருக்கும் கப்பலில் ஏறித் தாங்கள் உடனே காஞ்சிக்குப் போய் விடுங்கள். நான் தஞ்சாவூருக்குப் போகிறேன். அங்கே சக்கரவர்த்தியை நேரில் பார்த்து உண்மை நிலையைத் தெரிந்து கொள்கிறேன்."

"தஞ்சாவூருக்குத் தாங்கள் போவது சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுப்பது போலத்தான். போனால் திரும்பி வரமாட்டீர்கள். அப்படியே அங்குள்ள பாதாளச் சிறையில் போய்விடுவீர்கள். சக்கரவர்த்தியைப் பார்க்கவும் தங்களால் முடியாது."

"என்ன வார்த்தை சொல்கிறாய்? என்னைச் சிறையில் அடைக்கக் கூடிய வல்லமையுள்ளவன் சோழ நாட்டில் எவன் இருக்கிறான். சக்கரவர்த்தியை நான் சந்திக்கக் கூடாது என்று தடுக்கக் கூடிய ஆண்மை உள்ளவன் எவன் இருக்கிறான்? மேலும், அங்கே முதன் மந்திரி அநிருத்த பிரமராயர் இருக்கிறார்."

"பிரமராயர் இருக்கிறார். இருந்து என்ன பயன்? அவருக்கே சக்கரவர்த்தியைப் பார்க்க முடியவில்லை. இதோ அவருடைய சிஷ்யன் நிற்கிறானே, அவன் என்ன சொல்கிறான் என்று கேட்டுப் பார்க்கலாமே?"


சேநாதிபதி ஆழ்வார்க்கடியான் பக்கம் திரும்பி, "ஆம் இந்த வைஷ்ணவன் இங்கு நிற்பதையே மறந்து விட்டேன். திருமலை! ஏன் இப்படி மௌனமாக நிற்கிறாய்? சற்று முன் இளவரசர் சொன்னதுபோல் நீயும் ஊமையாகி விட்டாயா?" என்றார்.

"சேனாதிபதி! கடவுள் நமக்கு இரண்டு காதுகளைக் கொடுத்திருக்கிறார் வாய் ஒன்றைத்தான் கொடுத்திருக்கிறார். ஆகையால் 'செவிகளை நன்றாக உபயோகப்படுத்து பேசுவதைக் கொஞ்சமாக வைத்துக் கொள்' என்று என் குருநாதர் எனக்குச் சொல்லியிருக்கிறார். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நண்பர்கள் கண்ட கனவு



சேர மன்னன், விஜயன் தனக்கு ஒரு புதிய அந்தரங்க ஆலோசகரை நியமித்துக் கொள்ள விரும்பினான். அது பற்றி அவன் தன் அமைச்சர் நீலகண்டரிடம் ஆலோசிக்க வந்தான்.

"அரசே! நம் நாட்டில் அரசியல், பொருளியல், நீதித்துறை, ஆட்சித்துறை, எனப் பலதுறைகளில் நன்கு படித்தவர்கள் இருக்கின்றனர். இப்பதவிக்கு அறிவிப்பு செய்தால் அவர்களில் பலர் தங்களைக்காண வருவர். அவர்களுக்குத் தேர்வு நடத்தி நன்கு படித்த ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம். என்றார் அமைச்சர் நீலகண்டர்.

நாடெங்கிலும் பறை சாற்றுவித்து அந்தரங்க ஆலோசகர் பதவிக்கு தகுதி உடையவர்கள் குறிப்பிட்ட ஒரு நாளில் தேர்வுக்கு வரலாம் என அறிவித்தார். குறிப்பிட்ட நாளில் பல இளைஞர்கள் தேர்வுக்கு வந்தனர்.

அவர்களுக்கு நடந்த தேர்வில் இரு இளைஞர்கள் முன்னிலையில் வந்தனர். ஆனால் இருவரும் எல்லா விடயத்திலும் சமமாக இருந்ததால் அவர்களில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்ய அமைச்சரை அணுகினார் மன்னர்.

"இப்பதவிக்கு வெறும் புத்தகப்படிப்பு இருந்தால் மட்டும் போதாது. சிக்கலான பிரச்னைக[illegible] பெற்றவராக இருக்க வேண்டும். அவர்கள் இருவருக்கு மட்டும் பரீட்சை வைத்து அதில் தேர்ந்தவனைப் பதவிக்கு நியமியுங்கள்." என்றார்.

மறுநாள் அமைச்சர் இருவரையும் அழைத்து, "இன்று காலை என் நண்பரின் உடல் நிலை மிகவும் மோசமாகிவிட்டது. அவரது நிலை பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்," எனக் கூறி விவரிக்கலானார்.

"என் நண்பர் இன்று காலை என்னிடம் கூறியதை அப்படியே கூறுகிறேன்.என் நண்பர் வயதானவர், இதய நோயாளி. ஒரு நாள் இரவு அவர் பயங்கரமான கனவு ஒன்றைக் கண்டார்.அந்தக் கனவில் அவர் ஒரு அடர்ந்த காட்டிற்குள் வழி தவறிப் போய்விட்டார். அவர் ஒரு இடத்தில் நான்கு பாதைகள் சேர்வதைக் கண்டார்.

"மங்கிய இரவில் நட்சத்திர ஒளியில் அவர் அவற்றில் ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து நடந்து சென்றார். அங்கு சில சிங்கங்கள் திரிந்து கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று அவரை நோக்கிப் பாய்ந்து வந்தது.

"நண்பர் பயந்து வந்த வழியே ஓடி மறுபடியும் நான்கு பாதைகள் சேரும் இடத்தை அடைந்தார். இரண்டாவது பாதையில் பயமில்லாது நடந்து சென்றார். கொஞ்ச தூரத்தில் ஏதோ வெளிச்சம் இருந்தது கண்டு அங்கு சென்றார். அங்கு பல பாம்புப் புற்றுகள் இருப்பதையும் அவற்றின் மேல் பல பாம்புகள் படமெடுத்து ஆடுவதையும் கண்டார்.அவற்றில் ஒன்று ஐந்து தலை நாகம். அவரைக் கண்ட ஐந்து தலைப்பாம்பு சீறவே அவர் பயந்து வந்த வழியே திரும்பி ஓடி மீண்டும் நான்கு பாதைகள் சேரும் இடத்தை அடைந்தார்.

பிறகு அவர் மூன்றாவது பாதையில் நடந்து செல்லலானார். கொஞ்ச தூரம் சென்றதும் அது ஒரு மலை அடிவாரத்தில் போய் முடிந்தது. அங்கு பல மனித எலும்புக்கூடுகள் இருப்பதைக் கண்டு மலைத்து நின்றார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இன்று என்ன நிலையில் இருக்கின்றோமோ, அந்த நிலையை நமக்கு அளித்தது நமது எண்ணங்கள் தான். - புத்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# முட்டாள் தனமான நிர்வாகத்தாலேயே கோட்டாபய மக்களால் வெளியேற்றப்பட்டார்

## எந்த சூழ்ச்சியும் முன்னெடுக்கப்படவில்லை - சம்பிக்க

கோட்டபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து வெளியேற்ற தேசிய மற்றும் சர்வதேச சூழ்ச்சிகள் ஏதும் முன்னெடுக்கப்படவில்லை.

அவரது முட்டாள்தனமான நிர்வாகத்தால் பாரிய விளைவுகள் ஏற்பட்டன. கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதார படுகொலையாளி என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆகவே கடந்த காலம் பற்றி புத்தகம் எழுதுவது பயனற்றது. ராஜபக்ஷர்களின் வியாக்கியானத்தை நாட்டு மக்கள் கவனத்தில் கொள்வதில்லை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாவல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

தேசிய மற்றும் சர்வதேசத்தின் சதியினால் தான் ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டதாக கோட்டபய ராஜபக்ஷ குறிப்பிடுவது நகைப்புக்குரியது. கோட்டாவை பதவியில் இருந்து வெளியேற்ற எவரும் சதி செய்யவில்லை. ஏனெனில் சதி ஊடாகவே அவர் பதவிக்கு வந்தார்.

கோட்டபய ராஜபக்ஷவின் முட்டாள்தனமான நிர்வாகத்தினால் பாரிய விளைவுகள் ஏற்பட்ட எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, மின்விநியோகத் துண்டிப்பு ஆகியவற்றை பார்த்துக்கொண்டு மக்கள் கைகட்டிக்கொண்டு இருக்கமாட்டார்கள். நெருக்கடிகளை ஏற்படுத்திய கோட்டாபய ராஜபக்ஷ மக்களால் வெளியேற்றப்பட்டார் என்பதே உண்மை.

கோவிட் பெருந்தொற்று தாக்கத்தினால் தேசிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிடுவதை ஏற்க முடியாது. ஏனெனில், கோவிட் பெருந்தொற்று இலங்கைக்கு மாத்திரம் தாக்கம் செலுத்தவில்லை. இலங்கையை விட பொருளாதார பின்னடைவில் இருந்த நாடுகள் கோவிட் தாக்கத்தை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தன. கோவிட் பெருந்தொற்று இரண்டாம் அலையை கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே தோற்றுவித்தது.

கோவிட் தடுப்பூசிகள் கொள்வனவு தாமதப்படுத்தப்பட்ட தம்மிக்க பாணிக்கு முன்னுரிமை வழங்கியமை, கோவிட் மரணங்களின் உண்மையான எண்ணிக்கையை மூடி மறைத்தமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்க கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்கள் முயற்சிக்கிறார்கள். கோட்டபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்கள் பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றம் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. ஆகவே கடந்த காலம் தொடர்பில் கோட்டபய ராஜபக்ஷ புத்தகம் எழுதுவது பயனற்றது என்றார். (ம-10)

# சிவநிந்தைப் பழிபாவம் குலநாசம் என்றுணர்க!

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விரதத்தை சைவ மக்கள் அனுஷ்டிக்க முடியாத அளவிலேயே நிலைமை உள்ளது.

ஆம், வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி விரதத்தின் பொருட்டு முன்னேற்பாடுகளைச் செய்த ஆலய அர்ச்சகரும் ஏற்பாட்டாளர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் சிவராத்திரி விரதத்துக்குரிய பூசைப் பொருட்களையும் பொலிஸார் பறிமுதல் செய்திருந்தனர்.

இந்த அக்கிரமச் செயல் நேற்று முன்தினம் (07) நடைபெற்றதாயினும் நேற்றுக் காலை(08) அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

நிலைமை இத்தோடு முடிந்துபோகும் என்றால், இல்லை. நேற்று இரவு (08) மகா சிவராத்திரியின்போது ஆதிசிவனாலயத்தில் காத்திருந்த பொலிஸார் மிகக் கொடுஞ்செயல்களைச் செய்து சிவ வழிபாட்டை தடுத்து நிறுத்தியதோடு, அங்கிருந்த பெண்களை கழுத்தில் பிடித்து இழுத்துச் சென்று வெளியேற்றினர்.

கூடவே ஆலயத்தில் இருந்தவர்களையும் கைது செய்து ஆலயத்தைக் களேபரப்படுத்தியுள்ளனர்.

பௌத்த விகாரைகளைச் சட்டவிரோதமாக அமைப்பதைத் தடுக்காத பொலிஸார் - குற்றம் இழைத்த பௌத்த பிக்குகளை கைது செய்ய மறுக்கின்ற பொலிஸார் வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விரதத்தை அடாவடித்தனம் செய்து தடுத்தமை மிக மோசமான செயலாகும்.

பொலிஸாரின் இச்செயல் பொலிஸார் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்பதை உறுதி செய்கின்றது.

ஏலவே படையினரின் பாதுகாப்புடன் வெடுக்குநாறி மலைக்குச் சென்ற பௌத்த பிக்குகள்; ஆலயம் அமைந்த இடம் பௌத்த விகாரைக்குரியது என்று கோசம் செய்ததுடன் ஆதிசிவன் வீற்றிருக்கும் இடத்தில் பாதணிகளுடன் நின்று சிவநிந்தை செய்தனர்.

இப்போது புனிதமான மகா சிவராத்திரி விரதத்தை பொலிஸார் தடுத்து நிறுத்தியதோடு, ஆலயத்துக்கு வழிபடச் சென்றவர்கள் மீதும் அடாவடித்தனம் புரிந்துள்ளனர்.

உண்மையில் மத வெறியுடன் செயற்படுகின்ற சிங்களப் பேரினவாதிகள் ஓர் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இலங்கை சிவபூமி. இச்சிவபூமியில் நீங்கள் செய்கின்ற சிவநிந்தை இந்த நாட்டை அழிப்பதற்கானதென்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

புத்தபிரானை நீங்கள் நம்புகின்றவர்களாக இருப்பீர்களாயின், சிவனை நிந்திப்பது எந்த வகையிலும் நியாயமானது.

அந்தோ! ஆதிசிவனாலயத்தில் சிவ வழிபாட்டுக்குரிய பொருட்களை பொலிஸார் காலால் தட்டி விடுகின்ற கொடுமையைப் பார்க்கும் போது, அவர்கள் தங்களின் அழிவுக்குத் தாங்களே வழிகோலுகின்றனர் என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு சிங்களப் பேரினவாதமும் பொலிஸாரும் கண்மண் தெரியாமல் நடந்து கொள்கின்றனர். இப்பழிபாவம் சும்மா விடாது.

# உறக்கத்தில் இருந்த நண்பனின் ரூ. 50 இலட்சம் பணம் திருட்டு

## பொலிஸ் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

வர்த்தகரான தனது நண்பன் உறக்கத்தில் இருக்கும்போது அவரது பையில் இருந்த 50 இலட்சம் ரூபா பணத்தை திருடி தப்பிச்சென்ற நபர் ஒருவர் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த திருட்டு சம்பவம் கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு பணத்தை திருடி தப்பிச் சென்றவர் கொஸ்கொடை பிரதேசத்தை சேர்ந்தவராவார். இவர் பாதிக்கப்பட்டவரின் நெருங்கிய நண்பர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக சென்றுள்ள நிலையில் கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் அறையில் தங்கியிருந்து மதுபானம் அருந்திக் கொண்டிருந்துள்ளனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர் அதிகளவில் மதுபானம் அருந்தி இருந்ததால் அவர் சிறிது நேரத்தில் போதையில் உறங்கியுள்ளார்.

இதன்போது சந்தேக நபர், உறக்கத்தில் இருந்த தனது நண்பனின் பையில் இருந்த 50 இலட்சம் ரூபா பணத்தைத் திருடி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-10)

### வலம்புரி சங்கை கடத்திய

# பௌத்த தேரர் உட்பட இருவர் பொலிஸாரால் கைது

மாத்தறையில் இருந்து மட்டக்களப்பிற்கு கடத்தி கொண்டு செல்லப்பட்ட ஒருகோடி ரூபா பெறுமதியான வலம்புரிச்சங்குடன் பௌத்த தேரர் உட்பட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை மட்டு கல்குடா பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-10)

# ஐஸ் போதைப்பொருளுடன் 23 வயது பெண் கைது

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேடுதல் நடவடிக்கைகளுக்கு அமைய வாழைச்சேனை செம்மன் ஓடை கிராமத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் போதைப்பொருள் சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, ஐஸ் போதைப்பொருளுடன் 23 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வாழைச்சேனை முகாமின் கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் கே. ஜி. எல். குமாரவுக்கு கிடைத்த தகவலின் படி இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, குறித்த கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் அதிகாரிகள் நடத்திய சோதனையில், 53 கிராம் 240 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 24 கிராம் 30 மில்லி கிராம் கேரள கஞ்சா, 2,950 போதை மாத்திரைகள் மற்றும் 86,000 ரூபாய் பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

பின்னர், குறித்த சந்தேக நபரான பெண் போதைப்பொருளுடன் மேலதிக விசாரணைகளுக்காக வாழைச்சேனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். (ம-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் சுதந்திரமும் சமத்துவமும்




**மார்ச்-8 மகளிர் தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்**

*-பாரதியார்*

ஆதி முதல் இன்றுவரை பெண்கள் அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், அடிமைப்படுத்தப்பட்டும் வருவதை நேரடியாகவும், இலக்கியங்கள் மூலமாகவும் அறியமுடிகின்றது. பெண்களின் பெருமைபற்றி பாரதியார், மகாத்மாகாந்தி போன்ற அறிஞர்களும், பெண்ணியல் வாதிகளும் தமது எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்திவருகின்றனர். பொதுவாகப் பெண்கள் என்றாலே, அவர்கள் வீட்டில் இருந்து சமையல் வேலைகளைச் செய்பவர்களாகவும் கணவனுக்குப் பணிவிடை செய்பவர்களாகவும் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பவர்களாகவும் மட்டுமே இருக்க வேண்டும் என்பதே சமூகத்தின் கருத்து ஆகும். ஆண்களும், பெண்களும் சமமானவர்கள் என மேடைப் பேச்சளவில் மாத்திரமே இருந்து வருகின்றது.

உலகளாவிய ரீதியில் பெண்கள் பல விதமான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். வரதட்சணைக் கொடுமை, காதல் தோல்வி, கணவனால் துன்புறுத்தப்படுதலும் - கைவிடப்படுதலும், மாமியார் துன்புறுத்தல், பாலியல் துன்புறுத்தல்கள், சமத்துவம் அற்ற நிலைமை, சட்டவிரோத திருமணங்களும்- ஏமாற்றங்களும், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பல பிரச்சினைகளைப் பெண்கள் எதிர்நோக்குவதை அவதானிக்கமுடிகின்றது.

ஆணாதிக்க சமுதாயம் பெண்களை அடக்கி, ஒடுக்கி, பல்வேறு விதமான துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கி வருவதைக் காணலாம். ஆனால் இன்றைய பெண்கள் தங்களது தனித்துவத்தையும், அடையாளத்தையும், சுதந்திரத்தையும், சமத்துவத்தினையும் பேணிப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு தளங்களில் இருந்து போராடி வருகின்றனர்.

பல படித்த பெண்கள் கூடப் பலவிதமான துன்பங்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கிவருவதை நன்கு அறியமுடிகின்றது. அன்று முதல் இன்றுவரை பெண்களுக்கான உரிமைகளும், சுதந்திரமும் முழுமையாகக் கிடைக்கவில்லை என்றே கூறமுடியும். வீடுகளிலும், அலுவலகங்களிலும், வெளி இடங்களிலும் ஆண்களை விடப் பெண்கள் குறைவாகவே மதிக்கப்பட்டு வருகின்றனர். ஆரம்பத்தில் இருந்தே பெண்கள் கல்வி மறுதலிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த நிலை படிப்படியாக மாற்றப்பட்டுப் பெண்கள் கல்வியிலும், பதவியிலும் உயர்ந்த நிலையை அடைந்துவருகின்றனர்.

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**

*-பாரதியார்*

பெண்களும் ஆண்களும் சமமானவர்கள். இருபாலாரும் ஒரே மாதிரியான வாழ்க்கையை அனுபவிக்கப் பிறந்தவர்கள். உலகத்தில் பிறந்த அனைத்து மக்களும் கடவுளின் படைப்புக்களாகும். சாதி, மதம், இனம், மொழி, பால் என்ற வேறுபாடுகளைக் கடந்து யாவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற உயரிய நோக்கத்தை அறிஞர்களும், ஆன்மீகவாதிகளும் கவிஞர்களும், இலக்கியவாதிகளும், பெண்ணியல் வாதிகளும், தமது எழுத்துக்களின் மூலம் வலியுறுத்தி வருகின்றனர்.

மகிழ்ச்சியான வாழ்க்கை, ஆனந்தம், அமைதி ஆகியவற்றை நோக்கி மனிதன் தனது வாழ்க்கையை நகர்த்திச் செல்கின்றான்.

இதுவே மனிதனின் பிரதான இலக்கு ஆகும். ஒவ்வொரு மனிதனும், தானும், தனது குடும்பமும் தன்னைச் சுற்றி உள்ளவர்களும், தனக்கு நெருக்கமானவர்களும் சந்தோஷமாக இருக்கவேண்டும் என மிகவும் ஆசைப்படுகின்றான். இதற்கு ஆண், பெண் என்ற பாகுபாடு கிடையாது.

விஞ்ஞானம், தொழிநுட்பம், மனித நாகரிகம் ஆகியன உச்ச வளர்ச்சியைக் கண்டிருக்கும் இக்காலகட்டத்தில் கூட பெண்களுக்கு முழுமையான சுதந்திரமும், சமத்துவமும் கிடைக்கவே இல்லை என்பது தான் உண்மையான நிலைப்பாடு ஆகும்.

பெண்களுக்கு முழுமையான சுதந்திரமும், சமத்துவமும் கிடைக்கவேண்டும்.

ஆண்கள், பெண்கள் யாவரினதும் மனங்களில் மாற்றங்கள் ஏற்படல் வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் பெண்களைத் தங்களுக்கு இணையானவர்களாகவோ அல்லது மேலானவர்களாகவோ மதிக்கக் கற்றுக் கொள்ளல் வேண்டும்.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வு பெண்கள் சமத்துவம் பற்றி ஏற்படுத்தப்படல் வேண்டும். கல்வி அறிவின் மூலம் மக்கள் மனங்களில் மாற்றங்கள் ஏற்படுதல் அவசியமாகும். பெண்கள் எந்தவித பிரச்சினைகளும் இன்றி சுதந்திரத்துடனும், சமத்துவத்துடனும் வாழுகின்ற சூழ்நிலை ஏற்படுதல் வேண்டும். ஆண்கள் பெண்களை மதிக்கக் கற்றுக்கொள்ளல் அவசியம் ஆகும்.

முக்கியமாகப் பெண்கள் பெண்களை மதிக்க வேண்டும். தங்களைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையை முற்றுமுழுதாக அகற்றுதல் வேண்டும். ஆண்கள் பெண்களைத் தங்களுக்கு இணையாக மதிப்பிடவும், அவர்களும் தங்களைப்போலவே உரிமைகளையும், சுதந்திரத்தினையும், சுகபோகங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தினையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதனையும், பெண்கள் தங்களுடைய உரிமைகளையும், சுதந்திரத்தையும், சந்தோஷமான வாழ்க்கையையும், விட்டுக்கொடுக்காமல் தாமாகவே பெற்றுக்கொள்ளவும், அனுபவிக்கவும் கற்றுக்கொள்ளல் அவசியமாகும்.

அன்பு, நட்புணர்வு, சகோதரத்துவம் ஆகிய சிறந்த பண்புகளின் மூலம் அமைதி, சமாதானம், மகிழ்ச்சி ஆகியவற்றை இன, மத, மொழி, ஆண், பெண் என்ற வேறுபாடின்றி உலகிலுள்ள மக்கள் யாவரும் அனுபவிக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வியறிவு மிகவும் அத்தியாவசியமாகும். முக்கியமாகப் பெண்கள் தங்கள் கல்வியின் மூலமே தங்களுடைய நிலையினை மாற்றி அமைத்துக்கொள்ளமுடியும். கல்வியின் மூலமே மக்கள் மனங்களில் மாற்றங்களையும் ஏற்படுத்தமுடியும்.

**முனைவர் வீரமங்கைஸ்ராலினா யோகரத்தினம்**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3058

### நந்தினி




### மரீன்





### ராஜன்




### யுஸ்ரினா




### காவ்யா




### நிதர்சன்




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 107 வயது...

பூச்சி வேலுமுத்து என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

1917ஆம் ஆண்டு இவர் பிறந்துள்ளார். இவர் தனது 107 வயது பிறந்தநாளை அண்மையில் வெகு விமர்சையாக கொண்டாடியிருந்தார். இவருக்கு 10 பிள்ளைகள், 75 பேரப்பிள்ளைகள், 25 பூட்டப் பிள்ளைகள் 5 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் உள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாக சுகயீனமுற்றிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-10)

## பால் மா, அரிசி..

குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 935 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 1,190 ரூபாயாக காணப்பட்ட ஒரு கிலோ கிராம் காய்ந்த மிளகாயின் விலை 15 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அதன் புதிய விலை 1,175 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

வெள்ளை அரிசி கிலோ ஒன்றின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 195 ரூபாயாக பதிவாகியுள்ளது.

வெள்ளைச் சீனியின் விலை 3 ரூபாயினால் குறைக்கப்பட்டு, புதிய விலை 272 ரூபாயாக பதிவாகியுள்ளது. (ம-10)

## எதிர்க்கட்சிகளின்..

பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த கலந்துரையாடலில் பங்கேற்குமாறு பாராளுமன்ற நிதிக் குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வாவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணயநிதியத்துடனான வேலைத் திட்டத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மையில் ஹர்ஷ டி சில்வா கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கே.எம். மகிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்க உள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ம-10)

## இலங்கையர்கள்..

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உள்ளடங்களாக 6 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

35 வயதுடைய தர்ஷனி ஏகநாயக்க என்ற தாயையும் அவரது ஏழு வயதான மகன், நான்கு மற்றும் இரண்டு வயது மற்றும் இரண்டு மாதங்களேயான அவரது நான்கு பிள்ளைகளும் கொல்லப்பட்டனர்.

சம்பவத்தில் குறித்த பிள்ளைகளின் தந்தை பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், குறித்த வீட்டில் வசித்து வந்த 40 வயதுடைய காமினி அமரகோன் என்ற அவர்களது நண்பர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

கூரிய ஆயுதத்தினால் இந்தக் கொலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், சம்பவம் தொடர்பில் 19 வயதுடைய இலங்கை மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்த வீட்டிலிருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் உயிரிழந்த குடும்பத்தாரின் நெருங்கிய உறவினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இது தொடர்பான அடுத்த வழக்கு எதிர்வரும் 13ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதுடன் அன்றைய தினம் அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஒட்டாவா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் - பொல்கஹவெல பகுதியில் வசித்து வந்திருந்த இவர்கள் சுமார் 6 மாதங்களுக்கு முன்னரே கனடாவுக்கு சென்றுள்ளதாக உயிரிழந்த தர்ஷனி ஏகநாயக்கவின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஒட்டாவா நகர வரலாற்றில் பதிவான மிகவும் மோசமான படுகொலை எனவும் குறித்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தவிடயம் தொடர்பில், கனடாவின் ஒட்டாவாவுக்கான இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் அன்சுல் ஜான் தெரிவிக்கையில்,

இவ்வாறான சம்பவமொன்று இதற்கு முன்னதாக இடம்பெறவில்லை எனவும், இலங்கையைச் சேர்ந்த 19 வயதுடைய மாணவர் ஒருவர் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளமை வருத்தத்திற்குரியதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் உயிரிழந்தவர்களின் குடும்பத்துடன் இணைந்து இருந்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள், தேவையேற்படின் நாட்டுக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

அதற்கான செலவீனங்கள் தொடர்பில் எந்தவொரு தீர்மானங்களும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் சடலங்கள் கிடைக்கப்பெறும் தினம் தொடர்பில் எந்தவொரு அறிவிப்பும் எமக்கு கிடைக்கப் பெறவில்லை என கனடாவின் ஒட்டாவாவுக்கான இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் அன்சுல் ஜான் தெரிவித்தார். (ம-10)

## அநுரவை சந்தித்த கியூபத் தூதுவர்



மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இலங்கைக்கான கியூபத் தூதுவர் Andrés Marcelo Garrido வுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

இதன்போது நீண்டகாலமாக கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் இருந்த அரசியல் தொடர்புகள் பற்றியும் நிகழ்காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாடுகள் குறித்தும் விலாவாரியாக கலந்துரையாடப்பட்டது. (ம-10)

### தன நிதானய
திகதி - 2024.03.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1443
W 01 05 24 61 W
Double Chance 16142

### மஹஜன சம்பத
திகதி 2024/03/08
சீட்டிழுப்பு இலக்கம் 5413
Q 2 1 6 6 4 2

### மெகா பவர்
திகதி 08/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1761
Y 18 12 26 32 34
Double Chance 63978

### லக்ஷ 7 VIP
திகதி 2024.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 0239
K 3 6 1 7 0 9 K

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3655
சீட்டிழுப்பு திகதி 08.03.2024
L 12 47 74 76
L
58635

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 0722
கடகம் 18 31 43 55 கடகம்
16980
04

### சுப்பர் தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
08.03.2024 வெற்றி வாரம் 121
H G 2 3 5 5 8 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,701,916.00

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2387 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 08.03.2024 தினம் வெள்ளி
03 30 58 76 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,009,556.00

### சனிதா
திகதி 2024.03.08 வெற்றி வாரம் 4548 வர்ணம் செம்மஞ்சள்
27 31 63 64 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,299,577.60

### சசிரி
451 2024.03.08 பச்சை
06 32 35
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,812,800/-

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4099 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.08 தினம் வெள்ளிக்கிழமை
13 38 48 53 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.10,225,349.20

### ஜயோதா
1563 08.03.2024 வெள்ளி
W 18 04 28 44 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 510,612,598.20

### அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2213
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2024.03.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.97,250,432/-
16 23 32 39 F

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

**Legend of Arch Firm Pvt Ltd**

நிறுவனத்திற்கு மேசன், கூலி ஆட்கள் தேவை.
திறமைக்கேற்ப சம்பளம் நாள் அல்லது Task அடிப்படையில் வழங்கப்படும்.

Director

**076 578 2957**
**076 570 7394**

(004)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் பலாலி வீதி செல்வா மஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் 7 1/2 பரப்பு காணி 15 அடி அகலப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

**077 229 4985**
**077 621 2039**

(19384)

## விவசாயிகளுக்கு

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி 17 லீற்றர் (Sprayer) சில்வர், பிளாஸ்டிக்கானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவியினை உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"**



ஆர்க் . என் . கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917

(19396)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள சைவ உணவகத்திற்கு

- களஞ்சியக்காப்பாளர்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்

(தங்கி வேலை செய்யக்கூடியவர்கள்)

**077 611 3978**

(007)

## கனடாவில் உயர்கல்வி

## STUDY IN UK

இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

காலம்: 10/03/2024 காலை 10 மணி
இடம்: WEC-கல்லூரி (ஆரியகுளம்,யாழ்ப்பாணம்)

நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0779265447
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

(19390)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பாவித்த 85 (8அடி) தகரங்களும் 1145 அடி 2 x 1 கம்பஸ் நீப்பைகளும் (8'-9'-10') தூண் அச்சு, புதிய வக்கியூம் கிளீனர் (Vacuum cleaner) என்பன விற்பனைக்கு உண்டு.

**077 629 9675**

(19395)



## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை



### வர்த்தக நிலையங்களுக்கான ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 24.03.2024 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களுக்கான "கடை ஏலம் விடுதல்" எதிர்வரும் 10.03.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும் என்பதை வியாபாரம் செய்ய ஆர்வமுள்ள வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு:
- ஏலத்தின்போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
- பொலித்தீன் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபை
கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்.

(C-8491)

## VACANCY

சூப்பர் மாக்கட் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

- Chief Cashier ஆண்/ பெண்
- Supervisor ஆண்/பெண்

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
இடம் : உரும்பிராய்

**077 121 5548**

email:happysupermartlk@gmail.com

(008)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8499)

## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு

**077 544 8503**

(19118)

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777

(C-8499)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 264 /= | |
| 1 Kg அரிசி மா | - 196 /= | |
| 1 Kg Prima கோதுமை | - 188 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 295 /= | |
| 1 Kg சம்பா | - 230 /= | |
| 1 Kg தீட்டல்பச்சை | - 165 /= | |
| 10 Kg விஜிதா நாடு | - 1940 /= | |
| 180 ml Chik சம்போ | - 395 /= | ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3600 /= | ~~3900/=~~ |
| 180g Protinex | - 1799 /= | ~~2000/=~~ |
| 300 g நெஸ்டமோல்ட் | - 580 /= | ~~620/=~~ |
| 1Kg சன்லைட் பவுடர் றோஸ் | - 345 /= | ~~450/=~~ |
| 01 Lux சோப் றோஸ் | - 145 /= | ~~175/=~~ |
| 750 ml New VSP நல்லெண்ணை | - 1450 /= | ~~1550/=~~ |

1055/=



~~1110/=~~

(008)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நெல்லியடி கரணவாய் கரவெட்டியில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்து 2Km தூரம்
- விக்கினேஸ்வரா வித்தியாலயம் 500m தூரம்
- உச்சியம்மன் கோவில் அருகாமையில்
- 20 அடிப் பாதையுடன்
- 1 பரப்பின் விலை 500,000(ஐந்து இலட்சம்)
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 8 முதல் மாலை 5 வரை

(005)

**071 173 3911**
**076 853 5022**

## நின் சேவை நயப்பில்...



**திருமதி நளினி அகிலதாஸ்** (SLTAS-I)

(ஆசிரிய ஆலோசகர், ஆரம்பக்கல்வி)

ஆசிரியராய், ஆலோசகராய் முப்பத்தைந்து ஆண்டுகள் நிறைவான நின் சேவைக்கும் மகிழ்வான ஓய்வுக்கும் மனதார வாழ்த்துகின்றோம்.

சேவைக் காலம்

| | |
|---|---|
| யா/எழுதுமட்டுவாள் சி.சி.த.க பாடசாலை | 21.09.1988 - 14.09.1989 |
| யா/எழுதுமட்டுவாள் கணேச வித்தியாலயம் | 15.09.1989 - 04.02.1991 |
| கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி. | 05.02.1991 - 31.12.1992 |
| யா/மிருசுவில் றோ.க.த.க பாடசாலை | 01.01.1993 - 31.12.1998 |
| யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை | 01.01.1999 - 11.01.2009 |
| யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் | 12.01.2009 - 28.02.2011 |
| வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம் | 01.03.2011 - 22.05.2013 |
| யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் | 23.05.2013 - 24.06.2013 |
| வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம் | 25.06.2013 - 08.03.2024 |

(C-8489)

வாழ்த்துவோர் :- யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக நலன்புரிச் சங்கம்.

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org